தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழக கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்யும்: வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை,**

கன்னியாகுமரி கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை கொண்டுள்ளதால் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் சென்னையை பொறுத்தவரை அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த இரு நாட்கள் பெய்த கனமழை காரணமாக நாமக்கல், கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள முக்கிய அணைகளின் நீர்மட்டம் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது.

## தமிழகத்தில் இன்றும் மழை நீடிக்கும்

**சென்னை,**

தமிழகத்தின் பல பகுதிகளில் திங்கள்கிழமை மழை பெய்தது. இந்த மழை மேலும் நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கத்திரி வெயில் தொடங்கியுள்ள நிலையில், வெயில் கொளுத்தும் என்று அஞ்சப்பட்டது. ஆனால், வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால், தமிழகம் முழுவதும் இரு தினங்களாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக வெயிலின் தாக்கம் குறைந்துள்ளது.

இப்போது தமிழகத்தில் பெய்து வரும் மழை மேலும் சில நாள்களுக்கு நீடிக்கும். தென்தமிழகத்தின் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யும். வடதமிழகத்திலும் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது:

வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை, இலங்கை மற்றும் குமரிக் கடல் பகுதியில் உள்ளது. இதன் காரணமாக தமிழகம் மற்றும் புதுவையில் மழை நீடிக்கும் என்று தெரிவித்தனர்.

சென்னையில் மேகமூட்டம்: சென்னையில் கடந்த சில வாரங்களாக கடுமையான வெயில் நிலவி வந்தது.

தமிழகம் முழுவதும் மழை பெய்து வரும் நிலையில், சென்னையில் திங்கள்கிழமை வானம் மேக மூட்டமாக இருந்தது. பல இடங்களில் தொடர்ந்து மழை பெய்துகொண்டே இருந்தது.

திங்கள்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் பெய்த மழை (மில்லி மீட்டரில்):

குழித்துறை - 70, இரணியல் - 60, சிதம்பரம், சீர்காழி, மாமல்லபுரம், விருத்தாசலம் - 50, வாழப்பாடி, திண்டிவனம், நெய்வேலி - 40, ராசிபுரம், காரைக்கால், வால்பாறை, சென்னை, கும்பகோணம், நாமக்கல் - 30, தக்கலை, கன்னியாகுமரி, மதுரை, கழுகுமலை, பட்டுக்கோட்டை, பரமக்குடி, கடலூர், மயிலாடுதுறை - 20, திருவையாறு, புதுச்சேரி, மேட்டுப்பாளையம், அரியலூர்,

நாகப்பட்டினம், சேலம் - 10.

**நீடிக்கும் கோடை மழை; அக்னியின் தாக்கம் இல்லை**

**திருநெல்வேலி,**

திருநெல்வேலி மாவட்டத்தில் கோடை மழை நீடிப்பதால், அக்னி நட்சத்திரத்தின் தாக்கம் இல்லை. குளு குளு சீசனைப் போன்ற சூழல் நிலவுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கோடை வெப்பம் தொடர்ந்து 103 டிகிரியாக இருந்தது. இதனிடையே, கத்திரி வெயிலான அக்னி நட்சத்திரம் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. மூன்று வாரங்கள் நீடிக்கும் அக்னி நட்சத்திரத்தில் முதல் வாரத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் கோடை மழையால் வெயிலின் தாக்கம் குறைந்து காணப்படுகிறது. மாவட்டத்தில் குளுமையான சூழ்நிலை நிலவுகிறது.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம், தென்காசி, சேரன்மகாதேவி, அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, முக்கூடல் பகுதியில் திங்கள்கிழமை மிதமான மழையுடன் குளிர்ந்த காற்று வீசியது.

திங்கள்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 2 மி.மீ. மழையும், சேர்வலாறு அணையில் 1 மி.மீ. மழையும், கருப்பாநதி அணையில் 10 மி.மீ. மழையும், குண்டாறு அணையில் 32 மி.மீ. மழையும், அடவிநயினார் அணையில் 4 மி.மீ மழையும் பதிவாகியுள்ளது.

தென்காசியில் 37 மி.மீ., செங்கோட்டையில் 36 மி.மீ., ஆய்க்குடியில் 25 மி.மீ., அம்பாசமுத்திரத்தில் 9 மி.மீ., சேரன்மகாதேவியில் 4.1 மி.மீ., கன்னடியன் அணைக்கட்டில் 2 மி.மீ. மழை பெய்துள்ளது.

அணைகளின் நீர்மட்டம்: நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை இல்லாததால் அணைகளுக்கு நீர்வரத்து இல்லை. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 51.39 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 6 கனஅடியும், கடனாநதி, ராமநதி, கருப்பாநதி அணைகளுக்கு தலா 2 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 32.55 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 46.46 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 61.72 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 25.80 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 25 அடியாகவும் இருந்தது.

குடிநீர்த் தேவைக்காக பாபநாசம் அணையில் இருந்து 105 கனஅடியும், மணிமுத்தாறு அணையில் இருந்து 200 கனஅடியும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அருவிகளில் கூட்டம்: பாபநாசம், மணிமுத்தாறு அருவிகளுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளது.

## தமிழகத்தில் பல இடங்களில் மழை மேலும் தொடரும்

**சென்னை,**

தமிழகத்தின் பல பகுதிகளில் திங்கள்கிழமை (மே 5) மழை பெய்தது. இந்த மழை மேலும் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் கத்திரி வெயில் தொடங்கிவுள்ள நிலையில் வெயில் கொளுத்தும் என்று அஞ்சப்பட்டது. ஆனால்,

வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால், தமிழகம் முழுவதும் இரு தினங்களாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக வெயிலின் தாக்கம் குறைந்துள்ளது.இப்போது தமிழகத்தில் பெய்து வரும் மழை மேலும் சில நாள்களுக்கு தொடரும். தென்தமிழகத்தின் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யும். வடதமிழகத்திலும் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## பல்லடம் கறிக்கோழி கொள்முதல் விலை வீழ்ச்சி

**பல்லடம்,**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

ஞாயிற்றுக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 70-ஆக இருந்தது. கோழி இறைச்சி விற்பனை குறைவால் திங்கள்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 68-ஆக குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 3.22, சென்னையில் ரூ. 3.45.

## சேவூரில் ரூ. 8.40 லட்சத்திற்கு நிலக்கடலை ஏலம்

**அவிநாசி,**

சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் ரூ. 8.40 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது.

இந்தவாரம் நடைபெற்ற ஏலத்திற்கு, 1,000 மூட்டைகள் கொண்டுவரப்பட்டிருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ. 3,600 முதல் ரூ. 3,820 வரையிலும், 2-ஆவது ரகம் ரூ. 3,200 முதல் ரூ. 3,550 வரையிலும், 3-ஆவது ரகம் ரூ. 3,000 முதல் ரூ. 3,150 வரையிலும் ஏலம் போனது.

இதில், மொத்தம் ரூ. 8.40 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது. திருச்செங்கோடு, மணப்பாறை ஆகிய பகுதிகளில்

இருந்து 8 வியாபாரிகளும், மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், அன்னூர், மங்கரசவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர் ஆகிய பகுதிகளில் இருந்து 179 விவசாயிகளும் ஏலத்தில் பங்கேற்றனர்.

நிலக்கடலை விலை சென்ற வாரத்தைவிட குவிண்டாலுக்கு ரூ. 450 வரை குறைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## நிலக்கடலை ரகம் விற்பனை அறிவிப்பு

**நாமக்கல்,**

நிலக்கடலை கோ-6 ரகம் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்த நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் இயங்கி வரும் நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கோ-6 ரக நிலக்கடலை விற்பனைக்கு தயாராக உள்ளது. இது வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய கொடிகுத்து ரகமாகும்.

தற்போது நிலக்கடலை சாகுபடி செய்ய விதைகள் தேவைப்படும் விவசாயிகள் வேளாண்மை அறிவியல் நிலையத்தை அணுகி பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 04286-266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு பெறலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆலங்குளம் பகுதியில் முருங்கை, மாங்காய் விளைச்சல் அதிகரிப்பு

**ஆலங்குளம்,**

ஆலங்குளம் பகுதியில் தற்போது பெய்து வரும் சாரல் மழை காரணமாக மாங்காய் மற்றும் முருங்கையின் விளைச்சல் அதிகரித்துள்ளது. போதிய விலை இல்லாததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். வானம் பார்த்த பூமியான ஆலங்குளம்

பகுதியில் கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததையடுத்து விவசாயப் பணிகள் மிகவும் பின்னடைந்தது. உரிய விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தையே சந்தித்து வந்தனர். இதனிடையே நிகழாண்டு கத்தரி வெயில் மழையுடன் தொடங்கியதால் விவசாயிகளும் பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தொடர்ந்து இதே நிலை நீடித்தால் நிலத்தடி நீர் உயரும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் கோடைக்கால பயிரான முருங்கை மற்றும் மாங்காயின் விளைச்சல் தற்போது அதிகரித்துள்ளது. தோப்புகளில் மட்டுமல்லாமல் வீடுகளில் வளர்க்கப்பட்டு வரும் முருங்கை மற்றும் மா மரங்களில் காய்கள் கொத்துக் கொத்தாய் காய்த்துத் தொங்குவது கண் கொள்ளாக்காட்சியாக உள்ளது. எனினும் அவற்றுக்கு போதிய விலை இல்லாததால் வீடுகளில் வளர்ப்போர் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு கொடுத்து மகிழ்கின்றனர்.

தோட்டங்களில் வளர்ப்போர் போதிய விலை இல்லை என புலம்புகின்றனர். இங்கு வேலை பார்க்கும் கூலி ஆள்களுக்கு கையிலிருந்துதான் ஊதியம் வழங்கக வேண்டியிருப்பதாக ஆதங்கப்படுகின்றனர். கிலோ ஒன்று ரூ.70 வரை விற்ற மாங்காய் தற்போது ரூ.5 முதல் ரூ.8 வரை விற்கப்படுகிறது. முருங்கைக்காய் கிலோ தற்போது ரூ.10முதல் 12 வரை விற்பனையாகிறது. விளைச்சல் அதிகமாக இருந்தும் போதிய விலை இல்லாத காரணத்தில் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**திண்டிவனத்தில் 40 மி.மீ. மழை**

**விழுப்புரம்,**

விழுப்புரம் மாவட்டத்தில், கடந்த இரு தினங்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதில் திண்டிவனத்தில் அதிகபட்சமாக 40 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் முக்கிய நகரங்களில் பதிவான மழையளவு விவரம் (மி.மீட்டரில்): திண்டிவனம் 40, விழுப்புரம் 3, உளுந்தூர்பேட்டை 11, வானூர் 19, மரக்காணம் 20. செஞ்சி, திருக்கோவிலூர், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி போன்ற இடங்களில் மழை இல்லை. விழுப்புரம் மாவட்டத்தில் மொத்தம் 93 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. சராசரி மழையளவு 10.33 மி.மீ.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தென் தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு

**சென்னை**: "தென் தமிழகத்தில் ஒரு சில பகுதிகள் மற்றும் மலை மாவட்டங்களில், கனமழை அல்லது அதிகனமழைக்கு வாய்ப்புள்ளது," என, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர், ரமணன் தெரிவித்து உள்ளார்.

வங்கக் கடலில் உருவான, காற்றழுத்த தாழ்வு பகுதியின் காரணமாக, கடந்த இரு தினங்களாக, தமிழகத்தின் பல பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இந்த மழை, இன்னும், மூன்று தினங்களுக்கு நீடிக்கும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர், ரமணன் கூறியதாவது: தென் மேற்கு வங்கக் கடலில், இலங்கைக்கு மேல் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு பகுதியானது, மேற்கு நோக்கி நகர்ந்து, தற்போது, குமரிக்கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக, தமிழகத்தில் தென் மற்றும் வட மாவட்டங்களில், பரவலாக மழை பெய்துள்ளது. குறிப்பாக, கன்னியாகுமரி, தேனி, தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்டங்களில் கனமழை பெய்துள்ளது. அடுத்த, 24 மணி நேரத்தில், வட மாவட்டங்களின் ஒரு சில இடங்களிலும், டெல்டா மாவட்டங்கள் மற்றும் தென் மாவட்டங்களின் அநேக இடங்களில், மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும். தென் மாவட்டங்களில் கனமழை அல்லது அதிகனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. இந்த, காற்றழுத்த தாழ்வு பகுதியானது, அதே இடத்தில் நீடித்தாலும் அல்லது நகர்ந்தாலும், இன்னும், மூன்று தினங்களுக்கு மழை நீடிக்கும். சென்னையில், வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்; நகரின் ஆங்காங்கே மழை பெய்யும். இவ்வாறு, அவர் கூறினார்.

கடந்த 24 மணிநேரத்தில், கன்னியாகுமரி - குழித்துறை, 7; இரணியல், 6; கடலூர் - சிதம்பரம், விருதாசலம், காட்டு மன்னார் கோவில், நாகை - சீர்காழி, கொள்ளிடம், காஞ்சிபுரம் - மகாபலிபுரம், 5; விருதுநகர் - அருப்புக்கோட்டை, சேலம் -

வாழப்பாடி, தஞ்சை - திருவிடை மருதூர், ராமநாதபுரம் - வாலிநோக்கம், தேனி - பெரியாறு, விழுப்புரம் - திண்டிவனம், மயிலம், கடலூர் - நெய்வேலி உள்ளிட்ட பகுதிகளில், 3 செ.மீ., மழையும் பதிவாகி உள்ளது. வெப்பநிலையை பொறுத்தவரை, நேற்று சற்றே குறைந்துள்ளது. அதிகப்படியாக, வேலூர், தர்மபுரி மாவட்டங்களில், 38 டிகிரி செல்சியஸ் பதிவாகியது.

## விவசாயிகளுக்கு இலவச பயிற்சி

**மதுரை**: மதுரை விநாயகபுரத்தில் உள்ள மாநில நீர் மேலாண்மை பயிற்சி நிலையம் சார்பில், விவசாயிகளுக்கு தண்ணீர் சிக்கனம் குறித்த இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. மதுரையில் ஜூன் 3 முதல் 6 வரை, திண்டுக்கல்லில் ஜூலை 1 முதல் 4 வரை, தேனியில் ஜூலை 8 முதல் 11 வரை, ராமநாதபுரத்தில் அக்., 7 முதல் 10 வரை, சிவகங்கையில் டிச., 2 முதல் 5 வரை, விருதுநகரில் ஜூன் 24 முதல் 27 வரை பயிற்சி அளிக்கப்படுகிறது. சொட்டுநீர், தெளிப்பு நீர், பண்ணை குட்டை அமைத்தல், வயல்வெளிகளில் மழைநீர் சேகரிப்பு, மாற்றுப் பயிர் திட்டம் மற்றும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி, பயிர் சாகுபடி குறித்த நான்கு நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. மதிய உணவு மற்றும் போக்குவரத்து செலவு வழங்கப்படும், என துணை இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். மேலும் தகவல்களுக்கு: 0452 -291 1058ல் தொடர்பு கொள்ளலாம்.

## கடல் சீற்றம், கொந்தளிப்பு எதிரொலி: மீனவர்கள் 5,000 பேர் முடக்கம்

**வேதாரண்யம்**: கடலில் சீற்றம், கொந்தளிப்பால் வேதாரண்யம் அருகே ஆறுகாட்டுத்துறை, புஷ்பவனம், கோடியக்கரை உள்ளிட்ட மீனவ கிராமத்தினர், 5,000 பேர் வீட்டுக்குள் முடங்கினர்.

நாகை மாவட்டம், வேதாரண்யம் அடுத்த ஆறுகாட்டுத்துறை கடற்கரையிலிருந்து, நேற்று முன்தினம் மதியம், 2 மணிக்கு, 10 படகில், 40 மீனவர்கள் கடலுக்கு பல்வேறு குழுவாக, மீன்பிடிக்க புறப்பட்டனர். இலங்கை அருகே வங்காள விரிகுடா கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை தீவிரமடைந்ததால் கடல் நேற்று கொந்தளிப்பாகவும், சீற்றமாகவும் காணப்பட்டது. இதனால், நடுக்கடலில் படகுகளை நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி மீன்பிடித்தொழிலை செய்ய முடியாமல்

ஆறுகாட்டுத்துறை மீனவர்கள் பரிதவித்தனர். காற்று பலமாக வீசியதால் கடலில் வலைவிரிக்க முடியவில்லை. இதைத்தொடர்ந்து, மீன்பிடித்தொழிலை நிறுத்தி விட்டு ஆறுகாட்டுத்துறைக்கு நேற்றுக்காலை, 8 மணிக்கு படகுகளில் ஏமாற்றத்துடன் திரும்பினர். கோடியக்கரை, ஆறுகாட்டுத்துறை, புஷ்பவனம் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த, 5,000 மீனவர்களும் நேற்று கடலுக்கு செல்லவில்லை. இதையடுத்து, இவர்களின் 600க்கும் மேற்பட்ட சிறிய ரக பைபர் படகுகள், கட்டுமரங்களை பத்திரமாக, நங்கூரம் பாய்ச்சி கரையிலேயே நிறுத்தினர். இதனால், நேற்று வழக்கமான வருவாயை இழந்து, மீனவ குடும்பத்தினர் தவித்தனர். வேதையில் சீரான மழை: வேதாரண்யம், ஆயக்காரன்புலம், கோடியக்கரை, செம்போடை, தலைஞாயிறு, மணக்குடி உள்ளிட்ட கிராமங்களில் நேற்றுக்காலை, 8 மணி முதல் மதியம், 2 மணி வரை சீரான மழை பெய்தது. கோடை வெப்பம் தணிந்து, மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## அனைத்து மாநிலங்களும் வளம் பெற தேசிய அதி திறன் நீர்வழிச்சாலை வேண்டும்




ஐந்தாண்டு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட பின், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்காக, பல்வேறு பாதைகள் பின்பற்றப்பட்டன. அவற்றில் வேளாண்மைக்கும், நீர் மேலாண்மைக்கும் இரண்டு அடிப்படையான பாதைகள் பின்பற்றப்பட்டன.

அவற்றில், முதலாவது பாதையில், சுதந்திர இந்தியாவின் முதல் 30 ஆண்டுகளில் நாம் பயணித்தோம். அதன்படி மிகப் பெரிய அணைகள், நீர்த்தேக்கங்கள், ஏரிகள் ஆகியவை உருவாக்கப்பட்டன. 84 பெரிய அணைகளும், நீர்த்தேக்கங்களும் கட்டப்பட்டன. நீர் மேலாண்மையும், நீர்மின்சக்தி வசதிகளும் உருவாக்கப்பட்டன.

ஆனால், அவற்றின் மூலம், ஆண்டுக்கு, 45 ஆயிரம் கோடி கன அடி தண்ணீரையே தேக்க முடிந்தது.

இரண்டாவது பாதையானது, டாக்டர் கே.வி.எல். ராவ், கேப்டன் டி.ஜே.தஸ்தூர் ஆகியோரால் உருவாக்கப்பட்ட, முறையான நதிகளை இணைப்பதும், கரை வாய்க்கால்களை (**Contour Canal**) அமைப்பதும் ஆகும். இரண்டாம் பாதை குறித்து, தேசிய அளவிலான விவாதங்கள், பல எழுந்தன. பல ஆய்வுகள் மேற்கொண்ட பின், இம்முறையில், தொழில்நுட்ப, சுற்றுச்சூழல், நிதி, அரசியல் தலைமை ஆகியவை தொடர்பான சவால்களை, எதிர்கொள்ள நேரிடும் என்பது தெரியவந்தது. தேசத்துக்கு இது முக்கிமானது, ஜீவாதாரமானது என்றாலும், மேற்கண்ட காரணங்களால், அரசின் முயற்சிகள் தடைபட்டன; இந்தப் பாதையில் நாம் முன்னேற முடியவில்லை.

### வீணாகும் நீர் :

இந்தியாவின் நீர் மேலாண்மை பிரச்னையை, தற்போதுள்ள நீர் கொள்ளளவு மற்றும் நீர் சமநிலை ஆகியவற்றின் அடிப்படையில் ஆராய்ந்தோம்.இந்தியா, தன் எல்லா இயற்கை ஆதாரங்களின் வழியிலுமாக, ஓராண்டுக்கு மொத்தமாக, 12 லட்சம் கோடி கன அடி நீரை பெறுகிறது. இதில், 2.10 லட்சம் கோடி கன அடி நீர், ஆவியாகி விடுகிறது. மேலும், 2.10 லட்சம் கோடி கன அடி நீர், நிலவழியில் செல்லும்போது வீணாகிறது. ஒவ்வொரு ஆண்டும் மிகப்பெரிய அளவில், 4.5 லட்சம் கோடி கன அடி நீர், வெள்ளம் காரணமாக, கடலில் சென்று கலந்து விடுகிறது.இவ்வாறாக, நமக்கு மீதம் கிடைப்பது, 3.3 லட்சம் கோடி கன அடி நீரே. இதிலும், 1.29 லட்சம் கோடி கன அடி நீர், புவியடி நீர் மறுவூட்டத்துக்கு போய்விட, நிலத்தின் மேற்பரப்பில் தற்போது பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படும் நீரின் அளவு, வெறும், 1.11 லட்சம் கோடி கன அடி. ஆக, இவை போக, மீதம் பயன்படுத்திக் கொள்ள சாத்தியமான அளவுக்கு, மேலும், 90 ஆயிரம் கோடி கன அடி நீர் இருக்கிறது.

இந்தியா முழுவதும் நதி நீர் இணைப்பு திட்டம் நிறைவேறினாலும், இந்தியா முழுமையிலும் உள்ள, 84 பெரிய அணைகளில், இரண்டு முறை வெள்ள நீரை தேக்கினாலும், 90 ஆயிரம் கோடி கன அடி தண்ணீருக்கு மேல் சேமிக்க முடியாது. இந்தியாவில், மழைப்பொழிவில் பாதியளவு, இரண்டு வாரங்களுக்கே நீடிக்கிறது. கிட்டத்தட்ட, 90 சதவீத நதி வெள்ளம் பெருக்கெடுத்தோடும் காலம், 3 முதல் 4 மாத

காலங்களுக்கே நீடிக்கிறது. அதுவும், வெவ்வேறு கால கட்டங்களில் வரும் வெள்ளத்தால், இது சாத்தியப்படாமலேயே போனாலும் போகலாம். அப்படி என்றால், கடலில் கலக்கும், 4.5 லட்சம் கோடி கன அடிநீரை, எப்படி பயன்படுத்துவது? அதற்கு, 5 முதல் 10 ஆண்டுகளுக்குள் சாத்தியப்படக் கூடிய திட்டம் என்ன?

இந்தியாவில், ஒரு புதிய சிந்தனை எழுந்திருக்கிறது. அந்த மூன்றாவது தீர்வை, 'தேசிய அதி-திறன் நீர்வழிச்சாலை' என்று கூறலாம். இது தொடர்பான ஆராய்ச்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட பின், 'இந்தியாவுக்கான சரியான தீர்வு, தேசிய அதி-திறன் நீர்வழிச் சாலை திட்ட இயக்கம்' ஒன்றை துவங்குவதே' என, நாங்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம்.இந்த அமைப்பு, நதிகள், அணைகள், நீர்த்தேக்கங்கள், நீர்ப்பிடிப்பு பகுதிகள் ஆகியவற்றை ஒரு குறிப்பிட்ட உயரத்தில் இணைத்து, வெள்ளம் வரும்போது, நீரை அதில் ஏற்றி, பாய வைக்கும், வறட்சி காலங்களில், தேவையான மாநிலங்களுக்கு, அதிலிருந்து கொடுக்கும். நாட்டின் எந்த பகுதியில் நீர் பற்றாக்குறை இருந்தாலும், அவ்விடத்துக்கு இது செல்லும். இந்தியாவுக்கான அதி-திறன் நீர்வழிகள் குறித்த இந்த ஆய்வுக் கட்டுரை, இந்தியாவின் நீர் மேலாண்மை விவகாரத்தில், பல தலைமுறைகளுக்கு, எல்லா சூழல்களுக்கும், சாத்தியமான தீர்வு ஒன்றை முன்வைக்கிறது.

**இந்தியாவுக்கான தேசிய அதி -திறன் நீர்வழி திட்டத்தின் தன்மைகள்:**

ஏ.சி.காமராஜ் தலைமையிலான ஒரு குழு ஆராய்ந்து, முன்மொழிந்த திட்டமே, தேசிய அதி- திறன் நீர்வழி திட்டம். சரிவற்ற, நேரான **(zero&slope)**அமைப்புடன், ஒரு நீர்வழிச்சாலை முன்மாதிரி திட்டத்தை இந்த குழு, ஏற்கனவே உருவாக்கியுள்ளது.

தேசிய அதி- திறன் நீர்வழிச்சாலை பின்வரும் தன்மைகளை உடையது:
*கடல் மட்டத்திலிருந்து, 750 அடி உயரத்தில், ஒரே மட்டத்தில், சரிவற்ற நிலையில் நாடெங்கும், இந்த வழிச் சாலை கட்டப்படும்.

*இந்த நீர்வழிச் சாலை, நாடெங்கும் உள்ள ஆறுகள், அணைகள், நீர்ப்பிடிப்புப் பகுதிகள் ஆகியவற்றை, ஒற்றைத் தளத்தில், கிடை மட்டத்தில் இணைக்கிறது. இதற்குள் பாயும் நீர், அழுத்த வேறுபாடுகளின் காரணமாகவே பரவுகிறது.
*தேசிய அளவிலான இந்த நீர்வழிச் சாலை, போதுமான ஆழ, அகலங்களுடன் கட்டப்பட்டு, எந்த சமயத்திலும், 90 ஆயிரம் கோடி முதல் 1.80 லட்சம் கோடி கன அடி வரையிலான நீரை தேக்கி வைக்கும்படி, உறுதி செய்யப்படும்.

*நதிகளின் தலைப்பகுதிகளில் மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஏற்படும் வெள்ளம், அணையில் நிரம்பும் வெள்ளம் ஆகியவை, இந்த தேசிய நீர்த் தேக்க அமைப்புக்கு, நீரைக் கொண்டு வரும்.

*இந்த நீர்வழிச்சாலை, 'தேவையான இடத்திற்கு, தேவையான அளவு' என்ற இணைப்பு அமைப்பை ஒத்திருப்பதால், பற்றாக்குறை இடத்திற்கு, நீர் கொண்டு செல்லப்படுவதும், வெள்ள காலத்தில், நீர் ஏற்றப்படுவதும் சாத்தியமே.

*வளைவுகள், கொடுவிளிம்புகள் அற்றவையாகவும், குறைந்த தளத் தடிமன் உடையவையாகவும், நீர்வழிச்சாலை இருக்கும். 24 மணி நேரமும், இதில் நீர்ப் போக்குவரத்து சாத்தியம்.

*இதில் சரக்கேற்றம், சரக்கிறக்கம் ஆகியவற்றை திறம்பட செய்யும் வசதிகளை வைக்க முடியும். நவீன நீர் போக்குவரத்து முறைகளையும், இங்கே பொருத்த முடியும்.இதன் மூலம் நீர்வழிப் போக்குவரத்து, நீர்ப் பாசனம், வேளாண் உற்பத்தித் திறன், நீர் மின்சக்தி, பல்துறை வேலை வாய்ப்புகள் பெருகும்.ரயில் போக்குவரத்தை விட, இரு மடங்கு செயல்திறனும்; சாலைப் போக்குவரத்தைவிட எட்டு மடங்கு செயல் திறனுமுள்ள நீர்வழி போக்குவரத்து, ஆற்றல் வளங்களை பாதுகாப்பதில், மிகப் பெரிய அளவு அரசுக்கு உதவும். சாலைகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்து, சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கு மீளும் செயல்பாடுகளுக்கும் வழிவகுக்கும்.

எனவே இதை, அரசு- - தனியார் கூட்டு முயற்சியாக மேற்கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாதது. இதில், மத்திய - -மாநில அரசுகள், கூட்டாக இறங்க வேண்டும்.

நதிநீர் இணைப்புத் திட்டத்தோடு ஒப்பிடுகையில், இந்தத் திட்டத்தில் நில ஆர்ஜிதம், மறுகுடியேற்ற சிக்கல் போன்ற பிரச்னைகள் உருவாவதற்கான வாய்ப்புகள், மிக மிக குறைவே. ஏனென்றால், இந்த நீர் வழிச்சாலை பெரும்பாலும் உயரமான மலைப்பகுதியில் அமைவதால், ஒரு ரோடு போடும் அளவு தான் நிலம் தேவைப்படும். எனவே, மக்கள் மறு குடியேற்றம் போன்ற பிரச்னைகள், பெரும்பாலும் இருக்காது. அகற்றப்படும் மரங்களை விட, இரண்டு மடங்கு மரங்களை உருவாக்கவும் வாய்ப்பு உருவாகும்.

இந்தியாவில் நீர் பிரச்னை, தொடர்ந்து மோசமாகி வருகிறது. 1951ல் இந்தியாவின் தனிநபர் நீர் கிடைப்பு அளவு, 15,531 கன அடியாக இருந்தது. இதுவே, 2011ல், 4,635 கன அடியாக, அதலபாதாளத்துக்கு சரிந்தது. இது, 2025ல், 4,020 கன

அடியாகவும், 2050ல், 2,850 கன அடியாகவும் குறையும் என, புள்ளி விவரங்கள் கூறுகின்றன.ஆனால், மழைக் காலத்துக்குப் பிந்தைய நீர்த் தேவைக்காக, நீரை சேமிப்பது தொடர்பாக, இந்தியா இதுவரை, எதையுமே பெரிதாக செய்து விடவில்லை. அமெரிக்காவில் தனிநபர் ஒருவருக்கென கட்டி வைக்கப்பட்டுள்ள நீர்த்தேக்க வசதியின் அளவு, 15 ஆயிரம் கன அடி. நடுத்தர வருவாய் நாடுகளான சீனா, மெக்சிகோ போன்ற நாடுகளில், 3,000 கன அடி.இப்படிப்பட்ட சூழல்களில், இந்தியாவின் நீர் தேக்க கொள்ளளவு திறனோ, தனி நபருக்கு, வெறும், 600 கன அடியாக உள்ளது.

தனிநபர் தேவைக்கான கொள்ளளவை, 2025ல், 7,500 கன அடியாகவும், 2050ல், 15 ஆயிரம் கன அடியாகவும் உயர்த்துவது எப்படி என்பது, சவாலாக இருக்கிறது.தமிழகத்தில், 17 பெரிய ஆற்று பாசனங்களும், 61 பெரிய மற்றும் சிறிய நீர் பாசன அணைகளும், 41,948 கண்மாய்கள், ஏரிகள் மற்றும் குளங்களும் உள்ளன. ஆண்டுதோறும், 13,962 கோடி கன அடி அளவு தண்ணீர் நிரம்பக்கூடிய வாய்ப்பு இருந்தாலும், அதில் பாதி கூட நிரம்புவதில்லை.

பெரும்பாலான மழையினால் கிடைக்கும் தண்ணீர் இருப்பை, முழுவதுமாக நாம் விவசாய தேவைக்கு ஏற்ப உபயோகப்படுத்தும் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு விட்டது. கிட்டத்தட்ட, 24 லட்சம் ஹெக்டேர் பாசன நிலம் பெரிய மற்றும் சிறிய நீர் அணைகளால் பாசன வசதி பெறுகிறது. 90 சதவீதம் நீர் விவசாயத்திற்கென்று உபயோகிக்கப்படுகிறது.ஆண்டுதோறும் உபயோகப்படக் கூடிய நீர், 67 ஆயிரம் கோடி கன அடி ஆக இருக்கிறது. அதில், 60 சதவீத நிலத்தடி நீர், மறு சுழற்சிக்கு சென்று விடுகிறது. 40 சதவீதம் நீர் மட்டும் நமது உபயோகத்திற்கு கிடைக்கிறது. கடந்த ஐந்து ஆண்டு காலங்களில், பாதுகாப்பான நிலத்தடி நீர் இருப்பு என்று சொல்லக்கூடிய பகுதிகளில், 35.6 சதவீதத்தில் இருந்து, 25.2 சதவீதமாக, நீர் குறைந்து விட்டது. அதே போல் பாதியளவு நிலத்தடி நீர் இருப்பு பகுதிகளில், மொத்தத்தில், 35.8 சதவீத நிலங்களில், அளவுக்கு அதிகமாக, நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டு விட்டது. 2 சதவீத நிலம், உப்புத் தன்மையானதாக மாறிவிட்டது. ஏனென்றால் கடல் நீர் உள்ளே புகுந்ததாலும், ஆறு மற்றும் நிலத்தடி நீர் மாசு பட்டதாலும், ஏரிகள், குளங்கள் தூர்வாரப்படாததாலும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாததாலும். மழைநீர் தண்ணீர் சேமிப்பு சரிவர செயல் படாததாலும், வரத்து கால்வாய்கள் ஆக்கிரமிப்புகள் மற்றும் கழிவுகளால் மூடப்பட்டதாலும், இந்த நிலைமை ஏற்பட்டு விட்டது.

**துறைவாரியாக தண்ணீர் தேவையும், பற்றாக்குறையும்**

விவசாயத் துறை தான், தமிழகத்தின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் மிக முக்கிய துறையாகும். உணவு தேவையை சமாளிப்பதோடு மட்டுமல்லாமல், பெரும்பாலான மக்களுக்கு வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் துறையாக விளங்குகிறது. விதைக்கப்படும் மொத்தப் பரப்பளவில், 46 சதவீதத்திற்குத்தான் நீர்பாசனம் உள்ளது.

மீதம் உள்ள பரப்பளவு மானாவாரிதான். தண்ணீர் பற்றாக்குறையாலும், விவசாயத்திற்கு ஏற்ற விலையில்லாததாலும், விவசாய பொருட்களுக்கு ஏற்ற விலை கிடைக்காததாலும், விவசாயக் கூலி கட்டுபடியாகாததாலும், விவசாய உற்பத்திக்கு ஏற்ற இடங்கள், தொடர்ந்து நகரமயமாதலுக்கும், வீட்டு மனைகளுக்காகவும், தொழிற்சாலைகளுக்காகவும் பலியாகிவிட்டது. உணவுப்பாதுகாப்புக்கு முக்கிய காரணியாக விளங்குவது தண்ணீர் இருப்புதான். தண்ணீர் ஒரு அரிதான பொருளாகிவிட்டது. மற்ற துறைகளான தொழில் துறை, நீர் மின்சார உற்பத்தி, வீட்டு தேவைகள், விலங்குகளுக்கும் மற்றும் சுற்றுப்புற சுகாதாரத்திற்கும் தண்ணீர் தேவை அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

தமிழ் நாடு அரசின் தண்ணீர் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கையின்படி, பல்வேறு துறைகளுக்கு தேவையான தண்ணீர் இங்கே பட்டியலிடப்பட்டுள்ளது. மேற்கொண்ட துறைகளில் கூடுதல் தேவையாக (2012ம் ஆண்டைய கணக்கு) - 27 டி.எம்.சி / வருடம்.

ஆக மொத்தம் 1,921 டி.எம்.சி / வருடம் தேவைப்படுகிறது. ஆனால், தமிழகத்தின் மொத்த நிலத்தடி நீர் மற்றும் தரையில் இருக்கும் தண்ணீர் அளவு 1,643 டி.எம்.சி / வருடம். 2012 ம் ஆண்டு தேவையான கிட்டத்தட்ட 1,921 டி.எம்.சி என்பது, 2020ல், 2072 டி.எம்.சி.,யாக உயரும். அதாவது வருடா வருடம் 53 டி.எம்.சி பற்றாக்குறை ஏற்பட்டால், 2020ல், 429 டி.எம்.சி பற்றாக்குறை ஏற்படும். இதற்கு என்ன செய்யலாம்?

**டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம்**

**வெ.பொன்ராஜ்**

## வெயிலுக்கு இடையே மழை சென்னைவாசிகள் மகிழ்ச்சி

**சென்னை**: வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதியால், வெயில் சுட்டெரித்த சென்னையில், இரு தினங்களாக ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. அனல் காற்றை அனுபவித்த மக்கள், சற்றே நிம்மதி அடைந்துள்ளனர். தமிழகத்தில் அக்னி நட்சத்திரம் நேற்று முன்தினம் துவங்கியது. அதோடு கூட, வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதியும் உருவாகியது.

இதன் விளைவாக, நேற்று முன்தினம் காலை, சென்னையின் புறநகர் பகுதிகளில் மழை பெய்தது. தொடர்ந்து இரவில், வடசென்னை, தென் சென்னையின் பல பகுதிகளில் ஆங்காங்கே மழை பெய்தது. நள்ளிரவு முதல், ராயபுரம், கொடுங்கையூர், வளசரவாக்கம், விருகம்பாக்கம், போரூர், திருவல்லிக்கேணி, அடையாறு, தாம்பரம், சிட்லபாக்கம், பெருங்குடி உள்ளிட்ட பகுதிகளிலும் மழை பெய்தது. நேற்று காலை நிலவரப்படி, சத்தியபாமா பல்கலை பகுதி, 4; அண்ணா பல்கலை பகுதி, தரமணி, மாதவரம் 3; எண்ணூார், பூண்டி 2; சென்னை விமான நிலையம், சென்னை வடக்கு 1 செ.மீ., மழை பதிவாகியது. திடீரென இரு தினங்களாக பெய்துவரும் மழையால் சென்னைவாசிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இந்த மழை இன்னும் சில தினங்களுக்கு நீடிக்கும் என,

கூறப்படுகிறது. 'சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்; வெப்பநிலை, அதிகபட்சம், 30; குறைந்த பட்சம், 25 டிகிரி செல்சியசாக பதிவாகும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## கால்நடை மருத்துவ படிப்புகள் 12ம் தேதி முதல் விண்ணப்பம்

**சென்னை**: கால்நடை மருத்துவ படிப்புகளுக்கு, வரும், 12ம் தேதி முதல் விண்ணப்பம் வழங்கப்படுகிறது; இணையதளம் மூலமும் விண்ணப்பிக்கலாம். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை சார்பில், வரும் கல்வியாண்டிற்கு, கால்நடை மருத்துவம், உணவு தொழில்நுட்பம் மற்றும் கோழியின உற்பத்தி தொழில்நுட்ப இளநிலை பட்டப் படிப்புகளுக்கான விண்ணப்பம், வரும், 12ம் தேதி முதல், 30ம் தேதி வரை, வழங்கப்படுகிறது. சென்னை, தர்மபுரி, மதுரை, வேலூர், விழுப்புரம், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள, 14 மையங்களில், அச்சிடப்பட்ட விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்றன. இது தவிர, இணையதளம் மூலமும், இப்படிப்புகளுக்கு

விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், ஜூன், 2ம் தேதி மாலைக்குள், பல்கலையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**தணிந்தது ! : மழையால் வெயிலின் தாக்கம்... : குளிர் காற்றால் மக்கள் மகிழ்ச்சி**




மழையின்றி கடந்த மூன்று மாதங்களாக சுட்டெரித்த வெயிலின் தாக்கத்தினால் அவதிப்பட்டு வந்த நிலையில் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாளாக பரவலாக பெய்து வரும் சீரான மழையால் குளிர் காற்று வீசுவதால் மக்கள் மகிழச்சி அடைந்துள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில் ஆண்டின் சராசரியாக 1,309 மி.மீ., மழை பெய்ய வேண்டும். அதில், குளிர் காலமான ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் 36.8 மி.மீ., அளவும், கோடை காலமான மார்ச் முதல் மே வரை 71.9 மி.மீ., தென்மேற்கு பருவமழை காலமான ஜூன் முதல் செப்டம்பர் வரையில் 392.4 மி.மீ., வடகிழக்கு பருவ மழை காலமான அக்டோபர் முதல் டிசம்பர் வரை 773.7 மி.மீ., மழை பெய்ய வேண்டும். ஆனால், கடந்த 2012ம் ஆண்டு 713.2 மி.மீ., (54 சதவீதம்), கடந்தாண்டு 990 மி.மீ., (75 சதவீதம்) அளவே மழை பெய்தது. குறிப்பாக, கடந்தாண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் 459.31 மி.மீ., (59.36 சதவீதம்) மட்டுமே மழை பெய்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக மாவட்டத்தில் போதிய அளவு மழை பெய்யாததால், நிலத்தடி நீர் மட்டம் கணிசமாக குறைந்த நிலையில் இந்தாண்டு துவக்கத்திலிருந்தே வெயிலின் தாக்கம் அதிகரித்து வந்தது. குளிர் காலமான ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் மழை பெய்யாத காரணத்தினால், கோடை காலமான மார்ச் மாதம் வெயில் அதிகரித்தது. கடந்த மாதம் வெயிலின் அளவு 96.5

டிகிரியை தாண்டியதால் பகல் நேரங்களில் அனல் காற்று வீசியது. பகல் நேரங்களில் வெளியில் வருவதை மக்கள் தவிர்த்ததால் நகர சாலைகள் வெறிச்சோடி காணப்பட்டன.

கடந்த 5 மாதங்களாக மழையின்றி வெயிலின் தாக்கத்தில் மக்கள் அவதிப்பட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் கத்திரி வெயில் என்கிற அக்னி நட்சத்திரம் துவங்கியதால், எப்படி சமாளிக்க போகிறோம் என புலம்பத் துவங்கினர்.இந்நிலையில் வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்து தாழ்வு நிலை காரணமாக அக்னி நட்சத்திரம் துவக்க நாளான நேற்று முன்தினம் அதிகாலையிலேயே மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. அதில் நேற்று காலை 8:00 மணி வரை மாவட்டத்தில் சராசரியாக 19.53 மி.மீ., மழை பதிவாகியது. அதிகபட்சமாக அண்ணாமலை நகரில் 51 மி.மீ., மழை பெய்துள்ளது.

இதனால், நேற்று முன்தினம் இரவு அனல் காற்றின் தாக்கம் குறைந்திருந்தது. இந்நிலையில் இரண்டாம் நாளாக நேற்றும் மழை நீடித்தது. கடலூர், விருத்தாசலம், சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், வேப்பூர், பெண்ணாடம் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று காலை கன மழை பெய்தது.கடலூரில் காலை 10:30 மணி முதல் பகல் 12:00 மணி வரை இடைவிடாமல் பெய்த மழையால், சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. அதில், வாகனங்கள் தத்தளித்தபடி சென்றன. கடந்த இரண்டு நாளாக பெய்து வரும் மழை காரணமாக அனலின் தாக்கம் குறைந்த நிலையில், நேற்று காலை கொட்டித் தீர்த்த மழையால் குளிர்ந்த காற்று வீசியதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். போதிய மழை இல்லாமல், முந்திரி சாகுபடி குறையுமோ என ஏக்கத்தில் இருந்த நிலையில் நேற்று பெய்த மழையால், முந்திரி விவசாயிகள் நிம்மதியடைந்துள்ளனர். அதேபோன்று மானாவரியாக பயிர் செய்துள்ள விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மாவட்டத்தில் பெய்த மழையளவு

மாவட்டத்தில் நேற்று காலை 8:30 மணி வரை பெய்த மழை மி.மீ., விவரம்:

அண்ணாமலை நகர் 51, கொத்தாவச்சேரி, சிதம்பரம் 49, விருத்தாசலம் 48.30, காட்டுமன்னார்கோவில் 46, லால்பேட்டை 36, புவனகிரி 28, சேத்தியாத்தோப்பு 24.20, பரங்கிப்பேட்டை 24, வானமாதேவி 21, கடலூர் 16.40, ஸ்ரீமுஷ்ணம் 15, பண்ருட்டி மற்றும் மேமாத்தூர் 2 மி.மீ., மழை பெய்துள்ளது.

## கோடை மழையால் விவசாயிகள் குதுாகலம்!; கத்தரி வெயில் தாக்கம் குறைந்தது




**கோவை** : கோவை மாவட்டத்தில் பரவலாக பெய்யும் கோடை மழையால், வெயிலின் தாக்கம் குறைந்துள்ளது. மழையின் வருகையால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கோவை மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் உள்ளதால், ஆண்டுதோறும் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை கை கொடுப்பது வழக்கம். இதனால், தென்னை, வாழை, கரும்பு, நெல், காய்கறி மற்றும் தானிய வகைகள் அதிகளவில் பயிரிடப்படுகிறது. கடந்த 2010க்கு பிறகு ஒவ்வொரு ஆண்டும் மழை பொழிவு குறைந்து வருவதால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்து, விவசாய பரப்பும் குறைந்து வருகிறது. எதிர்பார்க்கும் மழை பொழிவு இல்லாததால், பாசன திட்ட அணைகளிலும் வறட்சி நிலவுகிறது. கடந்தாண்டு, தென்மேற்கு பருவமழை ஓரளவுக்கு கை கொடுத்ததால், கோவைக்கு குடிநீர் வழங்கும் சிறுவாணி அணையும், கோவை, திருப்பூர் மாவட்டத்திலுள்ள விவசாய நிலங்களின் பாசன தேவையை பூர்த்தி செய்யும், பி.ஏ.பி., திட்டத்திலுள்ள அணைகளும் நிரம்பின. ஆனால், வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவுக்கு பெய்யாததால், அனைத்து அணைகளிலும் நீர்மட்டம் சரிந்தது.பாசனத்துக்கு பற்றாக்குறையாக தண்ணீர் வினியோகம் செய்யப்பட்டது. குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய தேவைக்கேற்ப தண்ணீர் கிடைக்கவில்லை. இதனால், குடிநீர் பற்றாக்குறையும் நிலவுகிறது. கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக, கோடை வெயிலின் தாக்கம் அதிகமாகவே உள்ளது. இதனால், சின்னம்மை உள்ளிட்ட பாதிப்புகள் மக்களுக்கு ஏற்படத்துவங்கியுள்ளது. இந்நிலையில், கோவை மாவட்டத்தின் தெற்கு பகுதியிலும், ஒரு சில பகுதிகளிலும் லேசான மழை பெய்கிறது.வால்பாறை, பொள்ளாச்சி, ஆனைமலை பகுதிகளில் பலத்த காற்று, இடி, மின்னலுடன் மழை

பெய்ததால், மரங்கள் வேரோடு பெயர்ந்து சரிந்துள்ளன. அக்னி நட்சத்திரம் துவங்கி, கடும் வெயில் நிலவும் நிலையில், மழை பெய்வதால், சீதோஷ்ண நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மே முதல் வாரத்தில் மழை பெய்யத்துவங்கியுள்ளதால், இந்தாண்டு தென்மேற்கு பருவமழை சீசனில், எதிர்பார்ப்புக்கு ஏற்ப மழை பெய்யும் என, விவசாயிகள் நம்புகின்றனர். கடந்த மூன்று நாட்களாக பெய்யும் மழையால், நிலத்தை உழுது சித்திரை பட்டத்தில் பயிர் சாகுபடி செய்ய விவசாயிகள் தயாராகி வருகின்றனர். கோவையின் தெற்கு, தென்கிழக்கு, தென் மேற்கு பகுதிகளில் மழை பெய்கிறது. நேற்று முன்தினம் கிணத்துக்கடவு கிழக்கு பகுதியில் ஆலங்கட்டி மழை பெய்துள்ளது. ஆனால், கோவை மாநகர எல்லைக்குள் சுந்தராபுரத்தை கடந்து மழை பெய்யவில்லை என்பது ஆதங்கமாக உள்ளது. சுற்றிலும் பெய்யும் கோடை மழையால், வெயிலின் தாக்கம் குறைந்துள்ளது.கோவைக்கு குடிநீர் வழக்கும் சிறுவாணி அணைப்பகுதியில் இரு நாட்களாக மழை பெய்து வருகிறது. சிறுவாணி அணையின் 15 மீட்டர் உயரத்தில், 2.32 மீட்டர் உயரத்துக்கு தண்ணீர் உள்ளது. சிறுவாணி வனத்தில் 10மி.மீ., அடிவாரத்தில் 37 மி.மீ., மழை பெய்துள்ளது. மற்ற பகுதிகளில் பதிவான மழையளவு நிலவரம் வருமாறு (மில்லி மீட்டரில்) சோலையாறு - 5, பரம்பிக்குளம் - 42, ஆழியாறு - 31, திருமூர்த்தி - 8, மேல்நீராறு - 13, கீழ்நீராறு - 42, வால்பாறை - 17.2, வேட்டைக்காரன்புதுார் - 8, பொள்ளாச்சி - 17.4, நல்லாறு - 28, நவமலை - 5.5, காடம்பாறை - 4, துாணக்கடவு - 48, பெருவாரிப்பள்ளம் - 43 மழையளவு பதிவானது.விவசாயிகள் கூறுகையில், 'வழக்கமாக சித்திரை மாதம் கடைசியில், வடகிழக்கு பருவக்காற்று சீசன் முடிந்து, தென்மேற்கு பருவக்காற்று சீசன் துவங்கும். இந்தாண்டு சரியான பருவத்தில் சீசன் துவங்கியுள்ளது. சித்திரை பட்டத்தில் நிலத்தை தயார் செய்து, பயிர் சாகுபடி செய்ய இந்த மழை உதவும், பருவகாலம் முழுவதும் மழை தவறாமல் பெய்தால், இந்தாண்டு மானாவாரி பயிர் சாகுபடி சிறப்பாக இருக்கும். கத்தரி வெயில் கொளுத்தும் நிலையில், தற்போது பெய்யும் மழை தென்னை விவசாயிகளுக்கு நம்பிக்கை ஏற்படுத்தியுள்ளது' என்றனர்.

**இந்திய மாம்பழங்களுக்கு ஜப்பானிலும் சிக்கல்**



**புதுடில்லி**:ஐரேப்பாவை தொடர்ந்து, ஜப்பானுக்கும், இந்திய மாம்பழங்களை ஏற்றுமதி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.இந்தியாவின், அல்போன்சா மாம்பழங்கள் மற்றும் ஒரு சில காய்கறிகளில், நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கும் அதிகமாக பூச்சிக் கொல்லி ரசாயனம் உள்ளதாக கூறி, அவற்றின் இறக்குமதிக்கு, ஐரோப்பிய கூட்டமைப்பு தடை விதித்துள்ளது.உத்தரபிரதேசம்:இந்நிலையில், ஜப்பானிலும், இந்திய மாம்பழங்களின் இறக்குமதிக்கு அதிகாரபூர்வமற்ற தடை உள்ளதாக கூறப்படுகிறது. இந்திய மாம்பழங்களின் இறக்குமதிக்கு, 20 ஆண்டுகளுக்கு மேலாக, ஜப்பான் தடை விதித்திருந்தது. கடந்த, 2006ம் ஆண்டு, ஜூன் மாதம் இந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்டது.அது முதல், உத்தரபிரதேசம், சகரன்பூர் மாவட்டத்தில் உள்ள பிரத்யேக மையத்தில், மாம்பழங்கள் சோதனைக்கு பின்னரே, ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.எனினும், கடந்த ஆண்டு முதல், இந்த மையத்தில் இருந்து மாம்பழங்கள் ஏற்றுமதி மேற்கொள்ளப்படவில்லை.துவக்கத்தில், இந்திய மாம்பழங்களை விரும்பி வாங்கிய ஜப்பானியர், பின்னர் அவற்றில் ரசாயன கலப்பு அதிகம் :உள்ளதை அறிந்ததும், இறக்குமதியை குறைத்துக் கொண்டனர். அது மட்டுமின்றி, இந்திய ஏற்றுமதியாளர்கள் அழைக்காததால், சகரன்பூர் மையத்திற்கு மாம்பழங்களை பார்வையிட, ஜப்பான் அதிகாரிகள் வரவில்லை என்று கூறப்படுகிறது.வாய்ப்பு:தற்போது, ஐரோப்பியாவின் தடை உத்தர வால் பாதிக்கப்பட்டுள்ள மாம்பழ ஏற்றுமதியாளர்கள், அடுத்து, ஜப்பான் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுப்பர் என, எதிர்பார்க்கப்படுகிறது.அவர்களின் வருகைக்கு பிறகு, இம்மையத்தில் இருந்து, ஜப்பானுக்கான மாம்பழ ஏற்றுமதி துவங்க வாய்ப்புள்ளது என, ஏற்றுமதியாளர் ஒருவர் தெரிவித்தார்.

## பாகற்காய் பந்தலில் சுரைக்காய் ஊடுபயிர்

**விழுப்புரம்**: விழுப்புரம் அருகே பாகற்காய் பந்தலின் கீழ், சுரைக்காய் ஊடு பயிர் செய்து விவசாயிகள் கூடுதல் லாபம் பெறுகின்றனர். தற்போது விவசாயப் பணியில் பல்வேறு புதிய யுக்திகளைப் பயன்படுத்தி, கூடுதல் லாபம் பெறுவதற்கான முயற்சியில், விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். மரவள்ளி, சவுக்கு மற்றும் கொய்யா போன்றவை நடவு செய்தவுடன், அதில் உளுந்து, மணிலா மற்றும் மிளகாய் ஊடுபயிர் செய்கின்றனர். இவ்வாறு ஊடுபயிர் செய்யும் போது, அதன் மூலம் கிடைக்கும் லாபம், நீண்ட கால பயிர்கள் நடவு செய்த செலவு கிடைத்து விடுகிறது. இதேபோல் காய்கறி பயிர்களிலும், விவசாயிகள் ஊடு பயிர் முறையை மேற்கொண்டுள்ளனர். விழுப்புரம் அடுத்த பிடாகத்தை சேர்ந்த விவசாயி ஒருவர், தற்போது ஒரு ஏக்கர் பரப்பளவில் பந்தல் அமைத்து, பாகற்காய் சாகுபடி செய்துள்ளார். இந்த பந்தலின் கீழ் பகுதியில், சுரை நடவு செய்து, அதன் மூலம் சுரைக்காய் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. இந்த சாகுபடி முறை யால் கூடுதல் லாபம் கி டைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## ஆடு வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம்

**மரக்காணம்**: மரக்காணம் பகுதியில் ஆடுகள் வளர்ப்பில் விவசாயிகளிடையே ஆர்வம் அதிகரித்துள்ளது. மரக்காணம் ஒன்றியம் ஆட்சிக்காடு, ஆலப்பாக்கம், பனிச்சமேடு, கீழ்பேட்டை, அனுமந்தை, காளியாங்குப்பம், செய்யாங்குப்பம், ஏரிமேடு, கூனிமேடு ஆகிய கிராமங்களில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட செம்மறி ஆடுகளை இப்பகுதி விவசாயிகள் வளர்த்து வருகின்றனர். இப்பகுதியில் விவசாய வேலைக்கு கூலி ஆட்கள் வருவதில்லை. பத்து ஆண்டுகளாக விவசாய நிலங்கள் தரிசாக கிடக்கிறது. இங்கு விவசாயம் பெருமளவு செய்வதில்லை. விவசாயிகள் உள்ள இந்த பகுதியில் வெளிமாநில அரிசி விற்பனை ஆகிறது. எனவே விவசாயத்தை புறக்கணித்து விட்டு மாற்று தொழிலாக கால்நடைகள் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். கூனிமேடு, ஏரிமேடு உள்ளிட்ட பகுதியில் அதிகம் பேர் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள் ளனர். இதனால் மரக்காணம் ஒன்றியத்தில் விவசாய நிலங்களுக்கு தேவையான தொழு உரங்கள் தாராளமாக கிடைக்கின்றது.

## திண்டிவனத்தில் திடீர் மழை

**திண்டிவனம்**: திண்டிவனத்தில் நேற்று பெய்த திடீர் மழையால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். கோடை வெயிலால் மக்கள் மட்டுமல்லாது கால்நடைகளுக்கும் மிக பாதிப்பு ஏற்பட்டது. இந்நிலையில், நேற்று அதிகாலை 3 மணி முதல் 4 மணி வரை பலத்த மழை பெய்தது. தொடர்ந்து 8 மணி வரை லேசாக தூரிக் கொண்டே இருந்தது. நேற்று பகல் நேரம் முழுவதும் மேகமூட்டத்துடன் வெயில் இல்லாமல் இருந்தது. அக்னி நட்சத்திரம் துவங்கிய நேரத்தில் கோடை மழை பெய்தது மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது.

## ராஜா வாய்க்காலில் பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு

**ப.வேலூர்**: ப.வேலூர் அடுத்த ஜேடர்பாளையம் அணைக்கட்டின் இடதுபுறம், பாசனத்துக்காக, ராஜா வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாய்க்கால் மூலம், பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிடப்படும்.

அதன் மூலம், ஜேடர்பாளையம், பிலிக்கல்பாளையம், கபிலர்மலை, பாண்டமங்கலம், பொத்தனூர், ப.வேலூர், நன்செய் இடையாறு வரை, பாசன வசதி பெறுகிறது. அவற்றை பயன்படுத்தி, 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில், நெல், கரும்பு, வாழை, கோரை, வெற்றிலைக் கொடிக்கால், மரவள்ளி போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. சில மாதங்களாக, போதிய தண்ணீர் இன்றி, வாய்க்கால் வறண்டு காணப்பட்டது.

அதனால், பயிர்கள் சாகுபடி செய்ய முடியாமலும், சாகுபடி செய்த பயிர்களை பாதுகாக்க வழியில்லாமலும், விவசாயிகள் கடும் அவதிக்குள்ளாகினர். இந்நிலையில், நேற்று முன்தினம், ராஜா வாய்க்காலில், பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், இரு கரையையும் தொட்டபடி, தண்ணீர் பாய்ந்து செல்கிறது. ராஜா வாய்க்காலில் தண்ணீர் பாய்ந்து செல்வது, விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது. அதன் மூலம், சுற்று வட்டாரத்தில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் உயர்வதுடன். நிலத்தடி நீர்மட்டமும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இரண்டு நாட்களாக கோடைமழை பெய்து வருவதாலும் பயிர்களுக்கு போதிய அளவு தண்ணீர் கிடைக்கும் என்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்

## முட்டை விலை 322 காசாக உயர்வு

**நாமக்கல்**: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 322 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 311 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 11 காசு அதிகரித்து, 322 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 345, பெங்களூரு, 330, மைசூர், 337, ஹைதராபாத், 291, மும்பை, 329, விஜயவாடா, 290, கொல்கத்தா, 345, பர்வாலா, 264, டில்லி, 274. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 50 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 70 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## ராசிபுரத்தில் 34 மி.மீ., மழை: நிலக்கடலை பயிரிட அழைப்பு

**நாமக்கல்**: நாமக்கல் மாவட்டத்தில், அதிகபட்சமாக ராசிபுரத்தில், 34 மி.மீ., மழை பெய்துள்ளதால், நிலக்கடலை பயிரிட, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையம் அழைப்பு விடுத்துள்ளது. தமிழகத்தில், பருவமழை, இரண்டு ஆண்டுகளாக பொய்த்து போனதால், ஆறு, குளம், கிணறு, ஆழ்துளை கிணறு ஆகிய நீராதாரங்கள் வறண்டன. சராசரி மழையைக் காட்டிலும், 30 சதவீத அளவிற்கு மழை குறைந்துள்ளது. அதனால், மானாவரி சாகுபடி பயிர்களை கூட, பயிரிட முடியாமல், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், நேற்று முன்தினம், அக்னி நட்சத்திரம் துவங்கியுள்ள நிலையில், தமிழகமெங்கும், பரவலான மழை பெய்தது. அதில், நாமக்கல் மாவட்டத்தில், நாமக்கல், 25 மி.மீ., ராசிபுரம், 34 மி.மீ., சேந்தமங்கலம், 23 மி.மீ., திருச்செங்கோடு, 1 மி.மீ., மோகனூர், 23 மி.மீ., என, சராசரியாக மாவட்டம் முழுவதும், 12 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. கோடையில், மழை பெய்துள்ளதால், நிலக்கடலை பயிரிட, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையம் அழைப்பு விடுத்துள்ளது. இதுகுறித்து, திட்ட ஒருங்கிணைப்ப ாளர் மோகன் கூறுகையில்,""வறட்சியை தாங்கி வளரக்கூடிய கோ 6 என்ற,

நிலக்கடலை விதைகளை, தேவையான அளவு பெற்றுக் கொள்ளலாம்," என்றார். மேலும் விவரங்களுக்கு, 04286 - 266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## கொப்பரை ஏலம் ஜோர்

**பெருந்துறை**: பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் கொப்பரை தேங்காய் ஏல விற்பனை நடக்கிறது. இந்த வாரம் 2023 மூட்டைகளில், 98 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய் ஏல விற்பனைக்கு வந்திருந்தது. முதல் தரம் குறைந்த பட்சம் ரூ.101, அதிக பட்சம் ரூ.105.15, இரண்டாம் தரம் குறைந்த பட்சம் ரூ.50.85. அதிக பட்சம் ரூ.100.85 என மொத்தம் ரூ.ஒரு கோடிக்கு ஏல விற்பனை நடந்தது.

## பொள்ளாச்சியில் காய்ந்த மரங்களுக்கு உயிர் தந்தது கோடை மழை!; மானாவாரி சாகுபடிக்கு தயாராகும் விவசாயிகள்

**பொள்ளாச்சி** : பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதியில், கடந்த சில நாட்களாக பெய்து வரும் கோடை மழையால், பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மானாவாரி சாகுபடி செய்ய விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதிகளில், விவசாயம் முக்கியத்தொழிலாக உள்ளது. இப்பகுதிகளில், தென்னை மற்றும் மா உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. மற்ற பயிர்களை விட தென்னை சாகுபடி அதிகளவு உள்ளது. போதுமான நீர் வசதி கிடைத்து வந்ததால், சாகுபடி செய்யப்படும் பயிர்கள் மற்ற பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.இப்பகுதியில், விவசாயம் முக்கியத்தொழிலாகவும், பல்வேறு பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டு வந்ததால் பசுமை நகரம் என பொள்ளாச்சி அழைக்கப்பட்டு வந்தது. முற்றிலும் விவசாயத்தையே முக்கியத்தொழிலாக கொண்ட இப்பகுதி மக்கள் அதனை நம்பியே பிழைப்பை நடத்தி வருகின்றனர். போதிய மழை, பாசன நீர் கிடைத்ததால், போதிய லாபமும் பெற்று வாழ்க்கையினை நகர்த்தி வந்தனர். இந்நிலையில், கடந்த சில ஆண்டுகளாக மழை பொய்த்தது; பாசனத்திற்கு நீர்

கிடைக்காதது போன்ற காரணங்களினால், விவசாயம் பாதிக்கப்பட்டு வந்தது.போதிய நீர் கிடைக்காமல், விவசாய பயிர்கள் கருகின; மேலும், தென்னை மரங்களும் தண்ணீரின்றி காய்ந்தன. இதனால், தேங்காய் உள்ளிட்டவையின் உற்பத்தி குறைந்தது. தேவை அதிகரித்தும், வரத்து இல்லாததால், விலையும் உயர்ந்து காணப்படுகிறது. மேலும், வழக்கத்திற்கு மாறாக இந்தாண்டு முன்கூட்டியே பிப்., மாதத்திலேயே வெயிலின் தாக்கம் அதிகரித்து விட்டது. சுட்டெரிக்கும் வெயிலில், சென்று வர முடியாமல் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். நிலத்தடி நீர்மட்டமும் அதலபாதாளத்திற்கு சென்றதால், குடிநீர் பிரச்னையும் ஏற்பட்டது.

பருவமழை கைவிட்ட நிலையில், கோடைமழையாவது கை கொடுக்குமா என விவசாயிகள் எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர். மேலும், கிராமங்களில், மக்கள் மழை வேண்டி இறைவனை நூதன முறையில் வழிபாடு செய்து வந்தனர். இந்நிலையில், கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதால், விவசாயிகள் மற்றும் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கடந்த 3ம் தேதி பொள்ளாச்சி பகுதியில், பலத்த மழை பெய்ததால், வெங்கடேசா காலனி உள்ளிட்ட பகுதிகளில், மரங்கள் கீழே விழுந்தன. போக்குவரத்தும் ஸ்தம்பித்தது. சில இடங்களில், ஆலங்கட்டி மழையும் பெய்தது. தொடர்ந்து, மழை பெய்து வருவதால், விவசாயிகள் மானாவாரி சாகுபடி செய்ய ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர். 'அக்னி நட்சத்திரம் துவங்குவதற்கு முன்னரே வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. கடந்த 4ம் தேதி அக்னி நட்சத்திரம் துவங்கியதும் மேலும், தாக்கம் அதிகரிக்கும் என அச்சம் ஏற்பட்டது. ஆனால், கோடை மழை பெய்தததால், மகிழ்ச்சியாக உள்ளது. வறட்சியால் வாடிய மரங்களுக்கு உயிர் கொடுப்பது போன்று அமைந்துள்ளது இந்த மழை.தொடர்ந்து மழை பெய்தால், விவசாய சாகுபடி செய்ய முடியும். கோடை மழை சாகுபடிக்கு கை கொடுக்கும் என எதிர்பார்க்கிறோம். தற்போது, மானவாரி சாகுபடிக்கு தயாராகி வருகிறோம்,' என விவசாயிகள் தெரிவித்தனர். 'மழை நிலவரம் (மி.மீ.,)' : சோலையாறு -5.0, பரம்பிக்குளம்- 42.0, ஆழியாறு-31.0, திருமூர்த்தி-8.0, அப்பர் நீராறு- 13.0, லோயர் நீராறு-42.0, வால்பாறை-17.2, வேட்டைக்காரன்புதுார்- 8.0, பொள்ளாச்சி-12.0, மணக்கடவு- 17.4, நல்லுார்-28.0, பெருவாரிப்பள்ளம்-43, காடம்பாறை-4.0 என பதிவாகியிருந்தது. கோடை வெயில் சுட்டெரிக்கும் நேரத்தில், மழை பெய்து வருவது விவசாயிகள் மட்டுமின்றி, மக்களிடமும் மகிழ்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது.

## அரியலூர் மாவட்டத்தில் பரவலாக மழை

**அரியலூர்**: அரியலூர் மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்துள்ளது. கோடை வெயிலை தணிக்கும் வகையில் அரியலூர் மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்தது. நேற்று காலை 6 மணி முதல் பகல் 11 மணி வரை சாரல் மழையை போல தொடர்ந்து மழை பெய்தது. கோடை வெய்யிலின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட அரியலூர் மாவட்ட மக்களுக்கு இந்த மழையானது வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அரியலூர் மாவட்டத்தில் பெய்த மழை விபரம்: அரியலூர் 13 மி.மீ., ஜெயங்கொண்டம் 3 மி.மீ., திருமானூர் 31 மி.மீ., செந்துறை 3 மி.மீ.

## தஞ்சை மாவட்டத்தில் 194.90 மி.மீ., மழை

**தஞ்சாவூர்**: "தஞ்சை மாவட்டத்தில், கடந்த 4ம் தேதி காலை 8 மணி முதல் 5ம் தேதி (நேற்று) காலை 8 மணி வரையிலான, ஒருநாள் நிலவரப்படி மொத்தம் 194.90 மி.மீ., மழை பெய்துள்ளது' என, தஞ்சை கலெக்டர் அலுவலக மழையளவு பிரிவு அலுவலர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து, தஞ்சை கலெக்டர் அலுவலக மழையளவு பிரிவு அலுவலர்கள் மேலும் கூறியதாவது: தஞ்சை மாவட்டத்தில் கடந்த 4ம் தேதி காலை 8 மணி முதல் 5ம் தேதி காலை 8 மணி வரையிலான, மழையளவு விபரம் பகுதி வாரியாக, மி.மீட்டரில் வருமாறு:

அதிராம்பட்டிணம் 2.30, கும்பகோணம் 25.60, பாபநாசம் 3, தஞ்சாவூர் 7, திருவையாறு 15, திருக்காட்டுப்பள்ளி 9.40, அய்யம்பேட்டை 14, திருவிடைமருதூர் 42.20, மஞ்சளாறு 43, பூதலூர் 5.60, மதுக்கூர் 5.20, பட்டுக்கோட்டை 18, லோயர் அணைக்கட்டு 4.60 என, மொத்தம் 194.90 மி.மீ., மழை பெய்துள்ளது. இதன் சராசரி மழையளவு 9.28 மி.மீ., ஆகும். இதுவே, கடந்த 2013ம் ஆண்டு மே 5ம் தேதியில் மேற்கண்ட அனைத்து பகுதியிலும் மழையளவு ஜீரோவாக உள்ள நிலையில், தற்போது, நடப்பாண்டு மே 5ல் கோடை மழை 194.90 மி.மீ., எதிர்பாராமல் கிடைத்துள்ளது.

நேற்று மழையளவு பதிவாகாத பகுதிகள் விபரம்: வல்லம், கிராண்ட் அணைக்கட்டு, நெய்வாசல் தென்பாதி, வெட்டிக்காடு, ஈச்சன்கோட்கோட்டை, ஒரத்தநாடு, குருங்குளம் ஆகிய பகுதிகளில் மழையளவு ஏதும் பதிவாகவில்லை.

3 ஆண்டுகளில் சராசரி மழையளவு: கடந்த 2012 ஜன., 1ம் தேதி முதல் மே 5ம் தேதி வரை சராசரியாக 18.40 மி.மீட்டரும், 2013ம் ஆண்டு ஜன 1ம் தேதி முதல் மே 5ம் தேதி வரை சராசரியாக 83.80 மி.மீட்டரும், நடப்பாண்டு 2014 ஜன., 1ம் தேதி மே 5ம் தேதி (நேற்று) வரை சராசரியாக 29.67 மி.மீட்டரும் மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு, அவர்கள் கூறினர்.

மேலும், தஞ்சை நகரத்தில், கடந்த 3ம் தேதி (சனிக்கிழமை) மதியம் லேசான மழை தலைகாட்டியது. இதனால், வெம்மையில் இருந்து தஞ்சை மக்கள் ஓரளவு மீண்டனர். இதனைத்தொடர்ந்து, நேற்று (5ம் தேதி) அதிகாலை 5:30 மணி முதல் காலை 11:30 மணி வரை தொடர்ந்து இடைவிடாமல் தூரல் மழை பெய்து கொண்டே இருந்தது. இதனால், டூவீலர் ஓட்டிகள், தஞ்சை பழைய, புது பஸ் ஸ்டாண்ட் பகுதி நடைபாதை வியாபாரிகள், ரயில் பயணிகள் பெரிதும் அவதியடைந்தனர். மேலும் நகரத்தில் சில இடங்களில் குண்டு, குழி ரோடுகளில் மழை நீர் தேங்கி, பொதுமக்கள் சிரமப்பட்டனர். ஆனாலும், நேற்றும் வழக்கமான வெம்மையில் இருந்து மீண்டு, தஞ்சை நகர மக்கள் குளிர்ச்சியை அனுபவித்தனர்.

## திருவாரூர் மாவட்டத்தில் 80.8 மி.மீ., மழைப்பதிவு

**திருவாரூர்**: திருவாரூர் மாவட்டத்தில், நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் நேற்றுக்காலை 8 மணி வரை பல்வேறு இடங்களில் பெய்த மழையளவு மி.மீட்டரில் வருமாறு: திருவாரூர்-29, குடவாசல் 5.4, நன்னிலம் 8.3, நீடாமங்கலம் 5.2, வலங்கைமானில் 18.1, பாண்டைவையாறு தலைப்பு 14.8 என மொத்தம் திருவாரூர் மாவட்டம் முழுவதும் 80.8 மி.மீ., மழை பெய்துள்ளது. இதன் சராசரி மழையளவு 8.98 மி.மீ., ஆகும்.

## விவசாயிகளை ஒன்றிணைத்து புதிய நிறுவனம் துவக்க முயற்சி

**திண்டுக்கல்** : மக்காச்சோளம், மலைவாழை உட்பட பல்வேறு வகையான பயிர்களுக்கு உற்பத்தி நிறுவனங்களை துவக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒரே வகையான பயிரை சாகுபடி செய்யும் விவசாயிகளை ஒருங்கிணைத்து அவர்களின் பெயரில் நிறுவனங்கள் துவக்கப்பட்டு வருகின்றன. திண்டுக்கல்

மாவட்டத்தில் மக்காச்சோளம், மலை வாழைப்பழம், மா, திராட்சை, வெங்காயம், முருங்கை, வெள்ளை பூண்டிற்கு தனிநிறுவனங்கள் துவக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.இதன் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும். தேவையை அறிந்து கொண்டு அதற்கேற்றவாறு சாகுபடியை அதிகரித்து கொள்ளலாம். அன்றைய சந்தை நிலவரத்திற்கேற்ப விலையை நிர்ணயம் செய்யலாம். உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்றவற்றை மொத்தமாக வாங்கி இருப்பு வைத்துக்கொள்ளலாம். ஏற்றுமதியாளர்களோடு நேரடியாக தொடர்பு கொண்டு தங்கள் விளைபொருட்களை விற்பதற்கான வாய்ப்பு ஏற்படும்.வேளாண்மை வணிகதுறையினர் கூறுகையில்,""விவசாயிகளின் பெயரிலேயே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். லாபத்தில் சரிசமமான பங்கு அளிக்கப்படும். நஷ்டம் ஏற்பட்டாலும் பெரிய அளவில் பாதிப்பு இருக்காது. இத்திட்டத்திற்கு விவசாயிகள் மத்தியில் அதிக வரவேற்பு ஏற்பட்டுள்ளது," என்றனர்.

## அக்னியை அணைத்த மழை; வாலிநோக்கத்தில் 4 செ.மீ.,

**ராமநாதபுரம்** : ராமநாதபுரம் மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில், அக்னி வெயிலின் தாக்கத்தை தணிக்கும் விதமாக, நேற்று பகல் முழுவதும் மழை பெய்தததால் குளிர்ச்சியடைந்து, மக்கள் மகிழ்ந்தனர். ராமநாதபுரத்தில் நேற்று காலை 8.45 மணிக்கு துவங்கிய கனமழை 3 மணி நேரம் தொடர்ந்து பெய்தது. பின் பகல் முழுவதும் சாரல் பெய்தது. ரோடுகளில் வெள்ளம் போல தண்ணீர் ஓடியதால், வாகனங்கள் முகப்பு வெளிச்சத்தில் ஊர்ந்து சென்றன.தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது.

பல இடங்களில் மழைநீருடன், சாக்கடை கலந்து மக்கள் நடமாட சிரமப்பட்டனர்.நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த, 24 மணிநேரத்தில் பெய்த மழையளவு விபரம்(மில்லி மீட்டரில்): வாலிநோக்கம் 40.4, கடலாடி 33.4, வட்டாணம் 29, தங்கச்சிமடம் 25.5, பரமக்குடி 17.2, முதுகுளத்தூர் 9, கமுதி 12.5, தீர்த்தாண்டதானம் 11, ராமநாதபுரம் 7, பாம்பன் 6.8, ராமேஸ்வரம் 5.2, பள்ளமோர்குளம் 5, தொண்டி 2.8, திருவாடானை 2.5, ஆர்.எஸ்.மங்கலம் 2.

## விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு பயிற்சி

**சிவகங்கை** : விவசாயிகள் வருமானத்தை பெருக்கும் நோக்கில் வேளாண் சார்ந்த தொழிலாகிய காளான் வளர்ப்பு செய்முறை பயிற்சி வரும் 8ம் தேதி ஒக்கூர் அருகில் பிரவலூர் உழவர்பயிற்சி மையத்தில் இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் சார்பில் நடத்தப்படுகிறது.இப்பயிற்சி 30விவசாயிகளுக்கு மட்டுமே நடத்தபட உள்ளதால் ஆர்வமுள்ள விவசாயிகள் 99521 40932 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம். முதலில் பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பயிற்சி முழுவதும் இலவசம். கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு இலவச மதிய உணவு வங்கி சார்பில் வழங்கும் என உழவர் பயிற்சி மைய இயக்குனர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சிவகங்கையில் அதிக பட்சம் 25 மி.மீ.,; மழைபதிவால் மக்கள் மகிழ்ச்சி

**சிவகங்கை** : அக்னி நட்சத்திரத்தில் சிவகங்கையில் அதிக மழை பாதிவாகியுள்ளதால், பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர்.

அக்னி நட்சத்திரம் துவங்கிய நாட்களில் இருந்தே, தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. குறிப்பாக, வறண்ட பூமியான சிவகங்கையில், கடந்த 2 ஆண்டுகளாக பருவ மழை பொய்த்துவிட்டதால், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது. குடிநீர் பஞ்சம் ஏற்படாமல் இருக்க, குடிநீர் வடிகால் வாரியம், உள்ளாட்சி நிர்வாகங்களுக்கு, அரசு ரூ.18 கோடியை ஒதுக்கி, குடிநீர் அபிவிருத்தி பணிகளை செய்து வருகின்றனர். இருப்பினும், கோடை உழவிற்கு கூட மழையின்றி விவசாயிகள் பெரிதும் அவதிப்பட்டனர். கிணற்று பாசனம் மூலம், பயிர்களை நடவு செய்த விவசாயிகள் தண்ணீர் இன்றி, பயிர்களை காப்பாற்ற முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மகிழ்ச்சி: இந்த நிலையில், மாவட்டத்தில் பரவலாக தாலுகா வாரியாக தினமும், இரவு பகலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக, சிவகங்கை, காரைக்குடியில் அதிகளவில் மழை பெய்துள்ளது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி, சிவகங்கையில் 25 மி.மீ., மழை பதிவானது. அதை தொடர்ந்து, மானாமதுரையில் 12, இளையான்குடி 9.2, தேவகோட்டை 7.2, திருப்புத்தூர் 4 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. திருப்புவனம், காரைக்குடியில் நேற்று காலை நிலவரப்படி மழை

பதிவாகவில்லை. தொடர்ந்து, 3 நாட்களாக மழை பெய்துவருவதால், கந்தக பூமியில் குளிர்ச்சி ஏற்பட்டுள்ளது.இல்லை: திருப்புவனத்தில், கடந்த ஆண்டு இதே நாளில், 50.2 மி.மீ., மழை வரை பதிவானது. ஆனால், இந்த ஆண்டு இந்த நாளில் மழை இல்லை. இது திருப்புவனம் தாலுகா மக்களை கவலையடைய செய்துள்ளது.

## விருதுநகரில் கொட்டியது மழை

**விருதுநகர்** : விருதுநகரில் நேற்று ஓரளவு மழை பெய்தது. இதனால், தாழ்வான பகுதிகளை மழை நீர் சூழ்ந்தது. வெப்பம் தணிந்ததால், பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்தனர்.

விருதுநகரில் கடந்த ஒருமாதமாக, கோடை வெயில் வாட்டி எடுத்தது. பொதுமக்கள் அவதிப்பட்டனர். கடந்த ஆண்டும், வடகிழக்கு பருவ மழை பொய்த்ததால், குடிநீர், விவசாயத்திற்கு, தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்நிலையில், வெப்பச்சலனம் காரணமாக, கடந்தவாரம் முதல் மழை பெய்து வருகிறது. இதனிடையே, வங்கக்கடலில் உருவான, குறைந்த காற்றழுத்த தாழ்வுபகுதி காரணமாக, வெயிலின் தாக்கம் குறைந்து, கடந்த இரு நாட்களாக அவ்வப்போது மழை பெய்தது. இந்நிலையில், விருதுநகரில், நேற்று காலை சாரல் மழை பெய்தது. பின்னர், வானம் வெயில் இன்றி மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மதியம் 1.15 மணிக்கு, ஓரளவு மழை பெய்தது. அரை மணி நேரத்திற்கும் மேலாக இம்மழை நீடித்தது.

இதனால், தாழ்வான பகுதிகளை மழைநீர் சூழ்ந்தது. நேற்றுமுன்தினம், அக்னி நட்சத்திரம் துவங்கிய நிலையில், மழையால் பூமி குளிர்ந்து, ஓரளவு வெப்பம் தணிந்ததால், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். விவசாயிகள் கூறுகையில்," இந்த மழையால், நிலத்தடி நீர்மட்டம் சிறிது அதிகரிக்க வாய்ப்புள்ளது. நீர்நிலைகள் ஓரளவு நிரம்பி உள்ளன. இம்மழை, குடிநீருக்கு ஓரளவு கைகொடுக்கும். பருத்தி, கரும்பு,தென்னை, மாட்டுத்தீவனம் உள்ளிட்ட தோட்டப்பயிர்களுக்கு, இம்மழை பெரிதும் உதவும்,' என்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### முட்டை 322 காசாக உயர்வு



**நாமக்கல்**: நாமக்கல் முட்டை விலை நேற்று 322 காசாக உயர்த்தப்பட்டது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது.

இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டு ஆலோசித்தனர். இந்த கூட்டத்தின் போது, முட்டை விலையில் 11 காசு உயர்த்த முடிவு செய்யப்பட்டது.

அதை தொடர்ந்து ஒரு முட்டையின் பண்ணைகொள்முதல் விலை 311 காசில் இருந்து 322 காசாக நிர்ணயிக்கப்பட்டது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தமிழகம் முழுவதும் பரவலாக மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**



**சென்னை,**

குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை தீவிரம் அடைந்ததால் காவிரி டெல்டா மாவட்டங்கள் உள்பட தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>கோடை மழை</u>

அக்னி நட்சத்திரம் என்ற கத்திரி வெயில் தொடங்கியுள்ள நிலையில் வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை தீவிரம் அடைந்ததால் தமிழகத்தின் பல பகுதிகளில் பரவலாக மழை பெய்ய தொடங்கியுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் நள்ளிரவு 1 மணிக்கு பிறகு லேசான மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை நேற்று அதிகாலை 5 மணி வரை விட்டு,விட்டு பெய்தது. காலை 6.30 மணிக்கு தொடங்கிய பலத்த மழை 2 மணி நேரம் கொட்டியது. தொடர்ந்து விட்டு விட்டு மாலை வரை தூறிக்கொண்டே இருந்தது.

மீன்பிடிக்க செல்லவில்லை

இந்த மழையினால் முக்கிய சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. கடலூர் அண்ணா விளையாட்டு மைதானத்தில் மழைநீர் தேங்கி குளம்போல் காட்சி அளித்தது.

சிதம்பரம், புவனகிரி, பரங்கிப்பேட்டை, காட்டுமன்னார்கோவில், சேத்தியாத்தோப்பு பகுதிகளிலும் மழை கொட்டித்தீர்த்தது. பண்ருட்டி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று 2–வது நாளாக பரவலாக பெய்த மழையால் முந்திரி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடலூர் மாவட்டத்தில் மீனவர்கள் நேற்றும் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை.

விழுப்புரம் மாவட்டத்தில் விழுப்புரம், திண்டிவனம், விக்கிரவாண்டி, மரக்காணம் உள்ளிட்ட பல பகுதிகளில் ஓரளவு மழை பெய்தது.

விவசாயிகள் மகிழ்ச்சி

தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூர், பட்டுக்கோட்டை, கும்பகோணம், திருவையாறு உள்பட பல பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இந்த மழை கோடை நடவு செய்யப்பட்ட நெல் மற்றும் உளுந்து, பச்சை பயறு, எள் போன்றவற்றுக்கும் ஏற்றதாக உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திருவாரூர், நாகை மாவட்டங்களிலும் பல பகுதிகளில் பரவலாக மழை பெய்துள்ளது.

107 டிகிரி வரை வெயில் கொளுத்திவந்த திருச்சியில் நேற்று அதிகாலை முதலே சாரல் மழை பெய்தது. இதனால் வெயிலின் தாக்கம் குறைந்தது. புதுக்கோட்டை, பெரம்பலூர் மாவட்டங்களிலும் மிதமான மழை பெய்தது.

குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாகவே மழை பெய்து வருகிறது. நேற்றும் மாவட்டம் முழுவதும் பரவலாக லேசான மழை பெய்தது. அங்குள்ள பழையாற்றில் வெள்ளம் ஓடுவதால் சுற்றுவட்டார பகுதியில் உள்ள 30 குளங்கள் நிரம்பும் தருவாயில் உள்ளன.

<u>குற்றாலம் அருவிகளில் தண்ணீர்</u>

திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி, குற்றாலம், செங்கோட்டை, நாங்குநேரி உள்பட பல இடங்களில் பலத்த மழை பெய்தது. மழை காரணமாக குற்றாலம் அருவிகளில் தண்ணீர் கொட்டுகிறது.

இதமான சூழ்நிலை நிலவுகிறது. தூத்துக்குடி மாவட்டத்திலும் பரவலாக மழை பெய்தது. விளாத்திகுளத்தில் பலத்த மழை கொட்டியது. புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் 2–வது நாளாக மழை பெய்தது.

இதனால் வெப்பம் தணிந்து, குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியது.

**கடலோர மாவட்டங்களில் மழை நீடிக்கும்: ரமணன் தகவல்**



**சென்னை,**

அடுத்த 24 மணி நேரத்தில் கடலோர மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் கனமழை நீடிக்கும் என சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் ரமணன் தெரிவித்தார்.

மேலும், சென்னையை பொறுத்த வரை ஒரு சில இடங்களில் மழை பெய்யும் எனவும், இலங்கை அருகே மையம் கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுநிலை குமரி அருகே மையம் கொண்டுள்ளதாகவும் ரமணன் தெரிவித்துள்ளார்.

**குறைந்த காற்றழுத்த பகுதியால் தமிழகத்தில் 3 நாட்களுக்கு மழை நீடிக்கும் வானிலை மையம் தகவல்**



**சென்னை,**

குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, தற்போது கன்னியாகுமரி நோக்கி நகர்ந்துள்ளதால் தொடர்ந்து 3 நாட்களுக்கு தமிழகத்தில் மழை நீடிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<u>குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி</u>

அக்னி நட்சத்திரம் தொடங்கி உள்ள நிலையில் வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானதால் தட்பவெப்பநிலை மாறி தமிழ்நாடு முழுவதும் அனேக இடங்களில் இடியுடன் கூடிய கனமழை பெய்தது.

இதனால் ஏரி, குளங்கள், அணைக்கட்டுகளில் மழைநீர் தேங்கியதுடன், அருவிகளிலும் மழைநீர் கொட்டியது. பூமியும் குளிர்ந்து வெப்பமும் ஓரளவு தணிந்துள்ளது. அக்னி நட்சத்திர காலத்தில் வெப்பத்திற்கு பதிலாக மழை பெய்து குளிர்ந்து காணப்படுவதால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>சென்னையில் மழை</u>

இதேபோல் சென்னையில் நுங்கம்பாக்கம், மீனம்பாக்கம், எழும்பூர், தேனாம்பேட்டை, சாந்தோம், அடையார் மற்றும் அம்பத்தூர், ஆவடி, திருமுல்லைவாயில் பகுதிகளிலும் நேற்று காலை மழை பெய்தது. இதனால்

கோடம்பாக்கம், மாம்பலம், கடற்கரை, கோட்டை உட்பட பல்வேறு இடங்களில் மின்துண்டிப்பு ஏற்பட்டதுடன், எழும்பூரில் உள்ள எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலர் அலுவலகத்தில் உள்ள வாதமரம் ஒன்றும் வேரோடு சாய்ந்து விழுந்தது.

**புறநகர்**

சென்னை புறநகர் பகுதிகளான ஆலந்தூர், ஆதம்பாக்கம், மீனம்பாக்கம், நந்தம்பாக்கம், பரங்கிமலை, உள்ளகரம்-புழுதிவாக்கம், பெருங்குடி, நீலாங்கரை, மேடவாக்கம், மடிப்பாக்கம், வேளச்சேரி, கிண்டி உள்பட பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு நல்ல மழை பெய்தது. இந்த மழையினால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி இருந்தது.

**சாலையில் விழுந்த மரங்கள்**

மேலும், ஆலந்தூர் மண்டலத்திற்கு உட்பட்ட ஆதம்பாக்கம் 165-வது வட்டத்தில் சவுத் செக்டர், 166-வது வட்டத்தில் நேதாஜி தெரு, 167-வது வட்டத்தில் வேல்டாக்ஸ் காலனி, நந்தம்பாக்கம் சுந்தர் நகர் ஆகிய பகுதிகளில் இருந்த சில மரங்கள் சரிந்து விழுந்தன. கடந்த 4-ந்தேதி அக்னி நட்சத்திரம் அன்று தொடங்கிய இந்த மழை தமிழகம் முழுவதும் வரும் 3 நாட்களுக்கு தொடர உள்ளது.

**அதிகபட்ச மழை**

இதுகுறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:-

இலங்கை கடலில் நேற்று முன்தினம் நிலை கொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு நோக்கி நகர்ந்து நேற்று காலை 8 மணி அளவில் கன்னியாகுமரி கடல் பகுதியில் மையம் கொண்டுள்ளது. இதனால் கடந்த 24 மணிநேரம் தென்தமிழகத்தின் அனேக இடங்களிலும், வடதமிழகத்தின் ஒரு சில பகுதிகளிலும் பரவலான மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக குளித்துறையில் 7 சென்டி மீட்டரும், இரணியல் 6 சென்டி மீட்டர், சிதம்பரம், மகாபலிபுரம், விருத்தாசலம், ஆணைக்காரன் சத்திரம், காட்டுமன்னார்கோவில் பகுதிகளில் 5 சென்டி மீட்டரும், அருப்புக்கோட்டை, வாழப்பாடி, திருவிடைமருதூர்,

வாலிநோக்கம், பெரியார் அணைக்கட்டு, திண்டிவனம், நெய்வேலி, மயிலம் ஆகிய பகுதிகளில் 4 சென்டி மீட்டர் அளவும் மழை பதிவானது. இதில் கன்னியாகுமரி, தேனி, தூத்துக்குடி மாவட்டங்களில் பரவலாக நல்ல மழை பெய்தது.

**தென்மாவட்டங்களில் கன மழை**

அடுத்த 24 மணிநேரத்தில் தமிழகத்தின் வடமாவட்டங்களில் ஒரு சில பகுதிகளிலும், தென்மாவட்டங்களில் அனேக இடங்களிலும் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கலாம். குறிப்பாக தென்தமிழகம், டெல்டா மாவட்டம் மற்றும் மலை மாவட்டங்களான நீலகிரி, கோவை ஆகிய பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையில் வழக்கம் போல் மேகம் மூட்டத்துடன் காணப்படுவதுடன், ஒரு சில இடங்களிலும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. ஓரிரு நாட்களில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மெதுவாக நகர்ந்து அரபிக்கடல் பகுதிக்கு சென்றாலும், வங்ககடலில் உள்ள காற்று, மழையை தமிழக பகுதிக்கு இழுத்துவரும் என்பதால் தொடர்ந்து 3 நாட்களுக்கு தமிழகத்தில் மழை பெய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

## ஏற்காட்டில் சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுக்க 50 வகையிலான மலர்ச்செடிகள் தயார்



ஏற்காடு,

ஏற்காட்டில் சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுக்கும் வகையில் 50 வகையிலான மலர்ச்செடிகள் தயாராக உள்ளன.

ஏழைகளின் ‘ஊட்டி‘

தமிழகத்தில் கிழக்கு தொடர்ச்சி மலைகளில் சேர்வராயன் மலையில் அமைந்துள்ள மலைவாசஸ்தலம் ஏற்காடு. கடல் மட்டத்தில் இருந்து 1,515 மீட்டர் உயரத்தில் இயற்கை எழில் சூழ்ந்துள்ள அழகு, இதமான வானிலை சுற்றுலா பயணிகளை கவர்ந்து வருகிறது. சுற்றுலா ஸ்தலமான கொடைக்கானல், ஊட்டி போன்ற மலைவாசஸ்தலத்துடன் ஒப்பிடும்போது, இங்கு பல விஷயங்கள் மலிவாக இருப்பதால் ஏற்காட்டை ‘‘ஏழைகளின் ஊட்டி’’ என்று சொல்லப்படுவதுண்டு. சேலம் மாநகரில் இருந்து 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால், பரந்த அமைதியான பள்ளத்தாக்குகளும், இயற்கை எழில் கொஞ்சும் காட்சிகளையும் உடைய ஏற்காட்டில் சுற்றுலா பயணிகள் கண்டு களிப்பதற்கான இடங்கள் பல உண்டு. கோவில்கள், நீர்வீழ்ச்சிகள், குகைகள், மலை உச்சியில் இருந்து பார்க்கும்போது பள்ளத்தாக்கின் ஒய்யாரமான அழகு, சுற்றுலா பயணிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். ஏற்காட்டில் பட்ஜெட் ஓட்டல்கள், ஆடம்பர விடுதி, வீடு போன்ற தங்கும் விடுதி என சுற்றுலா பயணிகள் விருப்பம்போல தேர்வு செய்யலாம்.

கோடைவிழா நடக்குமா?

ஏற்காட்டில் உள்ள எழில் கொஞ்சும் இடங்களை சுற்றிப்பார்க்க ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் உள்ளூர் மட்டுமின்றி வெளிமாவட்டங்களில் இருந்தும், பக்கத்து மாநிலமான பெங்களூர், ஆந்திரா உள்பட பல்வேறு வெளி மாவட்டங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருவது வழக்கம். ஆண்டுதோறும் மே மாதம் இறுதியில் சுற்றுலாத்துறை–தோட்டக்கலைத்துறை சார்பில் கோடை விழா மலர்க்கண்காட்சியுடன் நடத்தப்படுவது வழக்கம். இந்த ஆண்டு சேலம் மாவட்டத்தில் போதிய மழை இல்லாவிட்டாலும், காய்ந்து கருகிபோன மரங்கள்கூட தற்போது துளிர்விட தொடங்கி இருக்கிறது.

அதை கருத்தில் கொண்டு இம்மாத (மே) இறுதியில் 39–வது கோடை விழா நடத்துவதா? வேண்டாமா? என்பது ஆலோசனையில் உள்ளது. ஏனென்றால்

பாராளுமன்ற தேர்தல் முடிந்தாலும் வாக்கு எண்ணிக்கை வருகிற 16–ந் தேதி நடக்கிறது. தேர்தல் நடத்தை விதிகள் 20–ந் தேதிவரை அமலில் உள்ளது. எனவே, கோடை நடத்துவது குறித்த முடிவு இன்னும் இறுதி செய்யப்பட வில்லை.

<u>மலர்ச்செடிகள் தயார்</u>

இருப்பினும் கோடை காலத்தில் ஏற்காடு வரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் லேடீஸ் சீட் அருகில் உள்ள தாவரவியல் பூங்காவில் காஸ்மாஸ், டேலியா, பிளாக்ஸ், எலிகோனியம், ஜெர்பிரா, சால்வியா, டெய்சி, பிரெஞ்ச்–அமெரிக்கா வகையிலான மேரிகோல்டு, கிளியோம், ஜினியா, கோரியாப்சிங், ஜேரோனியம், பியூசியா, இன்பேசன்ஸ், பேன்சி ரக பூக்கள், பெர்கோனியா, ஹைட்ரான்சியா, பெட்டூனியா, காப்ஸ்கோம் என 50–க்கும் மேற்பட்ட தாவரவியல் பெயரிலான வண்ண மலர்ச்செடிகள் 20 ஆயிரம் பூந்தொட்டிகளில் வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இவற்றில் 100 மொட்டுகள் கொண்ட செம்பருத்தி செடிகள் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் உள்ளன.

**<u>பெரியநாயக்கன்பாளையம் வாரச்சந்தையில் காய்கறிகள் விலை உயர்ந்தது</u>**



**பெ.நா.பாளையம்,**

பெரியநாயக்கன்பாளையம் வாரச்சந்தையில் காய்கறிகள் விலை உயர்ந்தது.

<u>காய்கறி விற்பனை</u>

கோவை மாவட்டத்தில் உள்ள முக்கியமான சந்தைகளில் பெரியநாயக்கன்பாளையம் வாரச்சந்தையும் ஒன்று. இங்கு வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமை சந்தை நடைபெறுகிறது. இதில் சுமார் 500–க்கும் மேற்பட்ட சிறு வியாபாரிகள் காய்கறி விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த சந்தையில் நேற்றைய விற்பனை நிலவரம் குறித்து அங்குள்ள வியாபாரி ஒருவரிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:–

விலை உயர்வு

வழக்கமாக கோடை காலங்களில் சந்தைக்கு காய்கறிகளின் வரத்து சற்று அதிகமாக இருக்கும். கடந்த வாரத்தில், வரத்து அதிகமாக இருந்ததால் விலை சற்று குறைவாக இருந்தது. அதன்படி, தக்காளி கூடை ரூ.60–க்கும், கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரையும் விற்பனை செய்யப்பட்டது. இதுபோல் சின்ன வெங்காயம் கிலோ ரூ.15–க்கும், பெரிய வெங்காயம் கிலோ ரூ.10–க்கும், ஒரு தேங்காய் ரூ.12–லிருந்து ரூ.20 வரையும், மற்ற காய்கறிகள் கிலோ ரூ.30–லிருந்து ரூ.50 வரையும் விற்பனை செய்யப்பட்டது.

ஆனால் இந்த வாரத்தில் காய்கறிகளின் வரத்து குறைந்து விட்டதாலும், கொள்முதல் விலை சற்று உயர்ந்ததாலும் காய்கறிகள் விலை சற்று அதிகரித்துள்ளது.

அதன்படி, இந்த வாரம் தக்காளி கூடை ரூ.110 முதல் ரூ.130 வரையிலும், கிலோ ரூ.20 முதல் ரூ.25 வரையிலும் விற்பனையானது.

சின்ன வெங்காயம் கிலோ ரூ.25, பெரிய வெங்காயம் கிலோ ரூ.15–க்கு விற்கப்பட்டது. ஒரு தேங்காய் ரூ.14 முதல் ரூ.25 வரையும், மற்ற காய்கறிகள் கிலோ ரூ.40–லிருந்து ரூ.60 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. இந்த வாரம், அதிகமானவர்கள் காய்கறிகள் வாங்க வரவில்லை. இதனால் சந்தையில் விற்பனை மந்தமாக தான் இருந்தது.

இவ்வாறு அவர் கூறினார்.

**வரத்து அதிகரிப்பால் அல்போன்சா மாம்பழம் விலை குறைந்தது**



**புனா,**

இந்தியாவிலிருந்து மாம்பழங்களை இறக்குமதி செய்ய ஐரோப்பிய யூனியன் தடைவிதித்துள்ளது. இதன் காரணமாக உள்நாட்டில் சப்ளை இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அல்போன்சா மாம்பழம் விலை குறைந்துள்ளது. பொதுவாக நம்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் மதிப்பிட்டைக் காட்டிலும் மாம்பழம் உற்பத்தி அதிகரித்து வருகிறது. மேலும் ஐரோப்பிய நாடுகளின் தற்போதைய தடை விதிப்பால் உள்நாட்டில் மாம்பழங்கள் சப்ளை அதிகரித்து வருகிறது. இதன் விளைவாக கடந்த 15 நாட்களாக அல்போன்சா மாம்பழம் விலை குறைந்து வருகிறது. அட்சய திரிதியை அன்று நாட்டின் அனைத்து முக்கிய சந்தைகளிலும் மாம்பழங்கள் அதிகளவில் குவிந்து காணப்பட்டது. உதாரணமாக மும்பை வாஷி மொத்த சந்தையில் 15 நாட்களுக்கு முன்பு மாம்பழம் வரத்து 60,000 பெட்டிகளாக இருந்தது. இது தற்போது 2 லட்சம் பெட்டிகளாக உயர்ந்துள்ளது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, மத்திய கிழக்கு நாடுகள், நியூசிலாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகள் இந்தியாவில் இருந்து மாம்பழங்களை இறக்குமதி செய்கின்றன. நியூசிலாந்து இறக்குமதி செய்யும் மாம்பழத்தில் இந்தியாவின் பங்கு 70 சதவீதமாக உள்ளது. 2012–13–ஆம் நிதி ஆண்டில் 55,000 டன் மாம்பழங்கள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. இதில் 4,000 டன் மாம்பழங்களை ஐரோப்பிய நாடுகள் இறக்குமதி செய்துள்ளன. ஆக, நம்நாட்டின் மாம்பழ ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஐரோப்பிய யூனியன் கொண்டுள்ளது.

**தஞ்சை மாவட்டத்தில் பரவலாக கோடைமழை விவசாயிகள் மகிழ்ச்சி**



**தஞ்சாவூர்,**

தஞ்சை மாவட்டத்தில் பரவலாக கோடை மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>கோடைகாலம்</u>

கோடைகாலம் தொடங்கியது முதல் வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் வெயில் 104 டிகிரிக்கும் அதிகமாக கொளுத்தியது. இதனால் மக்கள் வெயிலின் தாக்கத்தால் கடும் அவதிப்பட்டனர். பகல் நேரத்தில் தான் வெயில் இப்படிகொளுத்துகிறது என்றால் இரவிலும் வெயிலின் தாக்கம் அதிக அளவில் இருந்தது. இரவில் மின்விசிறி இல்லாமல் தூங்க முடியாத நிலை தான் காணப்பட்டது. மின்விசிறி இருந்தாலும் வெப்பக்காற்று தான் வீசியது. இந்த நிலையில் கோடைவெயிலின் உச்சகட்டமான அக்னிநட்சத்திரம் எனப்படும் கத்திரிவெயில் கடந்த 4–ந்தேதி தொடங்கியது. அன்று முதல் பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்தது. தஞ்சை மாவட்டத்தில் அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாளில் மழை பெய்வதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. ஆனால் மழை பெய்யவில்லை. இந்த நிலையில் தஞ்சை மாவட்டத்தில் நேற்று காலை 6 மணி முதல் 10 மணி வரை தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருந்தது.

<u>விவசாயிகள் மகிழ்ச்சி</u>

இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தஞ்சையில் அண்ணாசாலை பகுதி, கீழ்பாலம் பகுதியில் தண்ணீர் தேங்கி காணப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூர், பட்டுக்கோட்டை, கும்பகோணம், திருவையாறு, அய்யம்பேட்டை பகுதிகளில் பலத்த மழைபெய்தது. தஞ்சை மாவட்டத்தில் தற்போது விவசாயிகள் கோடை நெல் நடவு செய்துள்ளனர். இது தவிர பல்வேறு இடங்களில் உளுந்து பயிர், பச்சை பயறு, எள் சாகுபடியும் செய்துள்ளனர். இந்த நிலையில் கோடை மழை பெய்து வருவது இந்த பயிர்களுக்கு ஏற்றதாக உள்ளது. மேலும் இந்த மழை கோடை உழவுக்கும் ஏற்றதாக உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மழைஅளவு

தஞ்சை மாவட்டத்தில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

அதிராம்பட்டினம் 2.3, கும்பகோணம் 25.6, பாபநாசம் 3, தஞ்சாவூர் 7, திருவையாறு 15, திருக்காட்டுப்பள்ளி 9.4, அய்யம்பேட்டை 14, திருவிடைமருதூர் 42.2, மஞ்சளாறு 43, பூதலூர் 5.6, மதுக்கூர் 5.2, பட்டுக்கோட்டை 18, கீழணை 4.6.

**திருவாரூர் மாவட்டத்தில் 3-வது நாளாக கோடை மழை**



திருவாரூர் மாவட்டத்தில் நேற்று கோடை மழை 3-வது நாளாக நீடித்தது.

கோடை மழை தீவிரம்

திருவாரூர் மாவட்டத்தில் கோடை காலம் தொடங்கு வதற்கு முன்பாகவே வெயில் கடுமையாக இருந்தது. கடந்த மாதம் (ஏப்ரல்) 30-ந் தேதி திடீரென்று லேசான மழை பெய்தது. அப்போது முதல் வெயிலின் தாக்கம் குறைய தொடங்கியது. கடந்த 3-ந் தேதி மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும், ஒரு மணி நேரத்துக்கும் மேலாக பலத்த மழை பெய்தது. அக்னி நட்சத் திரம் தொடங்கிய நாளான நேற்றுமுன்தினமும் (4-ந் தேதி) வெயில் அதிகமாக இல்லை. மாறாக மாவட்டத் தின் பல்வேறு பகுதிகளிலும் மேக மூட்டங்கள் சூழ்ந்து குளிர்ந்த வானிலை நிலவியது.

அக்னி நட்சத்திரம் தொடங் கியதால், முன்பை விட வெயில் கடுமையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் வங்க கடலில் உரு வான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தீவிரம் அடைந்த தால், தமிழகத்தின் தென் மாவட்டங்களிலும், கடலோர மாவட்டங்களிலும் மழை பெய்யும் என வானிலை மையம் அறிவித்தது. அதன்படி நேற்று திருவாரூர் மாவட்டத் தின் அனைத்து பகுதிகளிலும் மழை பரவலாக மழை பெய் தது. இந்த மழை கடந்த 4 மாதங்களாக வாட்டி வதைத்து வந்த சூரியனின் வெப்பத்தை வெகுவாக தணிக்கும் தணிக் கும் வகையில் இருந்தது.

<u>வலங்கைமான், கூத்தாநல்லூர்</u>

வலங்கைமானில் நேற்று 3-வது நாளாக மழை நீடித்தது. நேற்று அதிகாலை முதலே சாரலாக மழை பெய்த வண் ணம் இருந்தது. கோடை காலம் என்ற அடையாளமே இல்லாத அளவிற்கு நேற்று முழுவதும் வானம் மேக மூட் டத்துடனே காணப்பட்டது. இதேபோல் கூத்தாநல்லூரில் கடந்த 3 நாட்களாக மழை பெய்து வருகிறது. இதனால் கூத்தாநல்லூர் நகரின் பல் வேறு இடங்களில் நேற்று மழை நீர் வெள்ளம்போல் தேங்கி நின்றது. மன்னார்குடி, முத்துப் பேட்டை பகுதியிலும் மழை பெய்தது. திருவாரூரில் நேற்று அதி காலையிலேயே மழை பெய்ய தொடங்கி விட்டது. திரு வாரூரை சுற்றி உள்ள கிராமங் களில் பலத்த மழை பெய்தது. நகரில் மாலை 4 மணி வரை விடாமல் தூறி கொண்டே இருந்தது. இதனால் நேற்று மாலை வரை வெயிலே இல்லை. வானம் மப்பும், மந்தாரமுமாக காட்சி அளித்தது. குளிர்ந்த காற்றும் வீசியது.

<u>மழை நிலவரம்</u>

மாவட்டத்தில் நேற்று காலை 8 மணியுடன் முடி வடைந்த 24 மணிநேரத்தில் திருவாரூரில் அதிகபட்சமாக 29 மில்லி மீட்டர் பதிவானது. மாவட்டத்தின் மற்ற பகுதி களில் பெய்த மழை அளவு விவரம் மில்லி மீட்டர் அளவு களில் வருமாறு:-

வலங்கைமான்-18, பாண்ட வையாறு - 15, நன்னிலம்-8, குடவாசல்-5, நீடாமங்க லம்- 5. நேற்று காலை நில வரப்படி மாவட்டம் முழுவ தும் சராசரியாக 9 மில்லி மீட் டர் மழை அளவு பதிவாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

<u>விவசாயிகள் மிகழ்ச்சி</u>

திருவாரூர் மாவட்டத்தில் தற்போது கோடை சாகுபடி பருவம் ஆகும். விவசாயிகள் நெல் மற்றும் பயறு வகை பயிர்களை பயிர் செய்து வரு கிறார்கள். பயிர்கள் ஓரளவுக்கு வளர்ந்துள்ள சூழலில் கோடை மழை தொடர்ந்து நீடித்து வருவது நல்ல பலனை தரும் என்று விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

**இடி, மின்னலுடன் பலத்த மழை நாட்டுப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை**



மணமேல்குடியில் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. அப் போது பலத்த காற்றும் வீசியது. இதனால் நாட்டுப்படகு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வில்லை.

<u>இடி, மின்னலுடன் பலத்த மழை</u>

மணமேல்குடியில் நேற்று காலை 9 மணி முதல் பலத்த காற்று, இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்யத் தொடங் கியது. இதைத் தொடர்ந்து அம்மாபட்டினம், கட்டு மாவடி, காரக்கோட்டை, நிலை யூர் போன்ற பகுதிகளி லும் அதிக அளவு மழை பெய் தது. இந்த மழையால் வயல் களில் தண்ணீர் தேங்கி நின் றது.

கண்மாய், குளங்கள், ஏரிகள் அனைத்திலும் பலத்த மழையால் தண்ணீர் தேங்கி யது. அக்னி நட்சத் திர வெயில் ஆரம்பித்த நிலையில், இந்த மழை பெரும் மகிழ்ச்சியை கொடுப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

மேலும் திடீரென பெய்த மழையோடு, கடல் பகுதியில் காற்றும் பலமாக வீசியது. கடலில் சாரல் மழையும் பெய் தது.

<u>மீன்பிடிக்க செல்லவில்லை</u>

தற்போது விசைப்படகு மீனவர்களுக்கு 45 நாட்கள் தடை காலம் உள்ளதால் கடலுக்கு மீன்பிடிக்க செல்லாமல் இருந்து வருகின்றனர். நாட்டுப் படகு மீனவர்கள் மட்டுமே கடலுக்கு சென்று மீன்பிடித்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்று பெய்த பலத்த மழையின் காரணமாக காலையில் கடலுக்கு மீன்பிடிக்க செல்லக்கூடிய நாட்டுப்படகு மீனவர்களும், மொரல் வலை, நண்டு வலையு டன் மதியம் மீன்பிடிக்க செல்லக் கூடிய நாட்டுப்படகு மீனவர்களும் கடலுக்கு செல்லவில்லை.

மேலும் பொன்னகரம், கட்டுமாவடி, கிருஷ்ணாஜி பட்டிணம், புதுக்குடி ஆகிய பகுதிகளில் உள்ள நாட்டுப் படகு மீன வர்களும் கடலுக்கு செல்ல வில்லை.

**ராமநாதபுரம் அக்னி நட்சத்திரத்தில் அடைமழை**



ராமநாதபுரம்,

அக்னி நட்சத்திரம் தொடங்கியுள்ள இந்த நேரத்தில் அடைமழை பெய்ததால் ராமநாத புரம் மாவட்ட மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ள னர்.

அக்னி நட்சத்திரம்

சூரியனுக்கு மிக அருகில் பூமி வரும் நாட்களை அக்னி நட்சத்திரம் என்றும், கத்தரி வெயில் காலம் என்றும் அழைப்பதுண்டு. சுமார் 24 நாட்கள் வரை நீடிக்கும் இந்த அக்னி நட்சத்திர காலத்தில் முதல் 8 நாட்கள் வெப்பத்தின் தாக்கம் மிதமாகவும், அடுத்த 8 நாட்கள் மிக கடுமையாகவும், கடைசி 8 நாட்களுக்கு வெப் பம் கொஞ்சம் தணிந்தும் காணப்படுவது வழக்கம். இந்த அக்னி நட்சத்திர காலத் தில் சுட்டெரிக்கும் வெயில் மக்களை வாட்டி வதைப்பது வாடிக்கையாக இருந்து வரு கிறது. ஆனால் சில ஆண்டு கள் அதிசயிக்கத்தக்க வகை யில் ஆங்காங்கே மழை பெய் வதும் உண்டு. கடுமையான வெப்பத்தினால் ஏற்படும் வெப்ப சலனத்தின் காரண மாக இந்த மழை பெய்வதாக கூறப்படுகிறது.

தற்போது இந்த ஆண்டு கத்தரி வெயில் என அழைக் கப்படும் அக்னி நட்சத்திர வெயில் நேற்று முன்தினம் தொடங்கியது. வருகிற 28-ந் தேதி வரை நீடிக்க உள்ள இந்த அக்னி நட்சத்திர வெயில் தங்களை என்ன பாடுபடுத் தப்போகிறது? என்று மக்கள் கவலையில் ஆழ்ந்திருந்தனர். இதற்கு காரணம் ராமநாதபு ரம் மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக வட கிழக்கு பருவமழையும், வைகை தண் ணீரும் இல்லாத தால் மாவட் டமே வறண்டு கொதிக்கும் பூமியாக மாறிவிட்டது. இதற்கு மேலும்

அதிர்ச்சியூட்டும் வகையில் மாவட்டத்தில் கடந்த பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களில் அக்னி நட்சத்திரத்தை மிஞ்சும் வகை யில் கடுமையான வெயில் மக் களை வாட்டிவதைத்தது. வெளியில் தலைகாட்ட முடி யாத வகையில் வெயில் அடித் ததால் சிறியவர் முதல் பெரி யவர் வரை கடும் அவதிய டைந்து வந்தனர். தாங்க முடி யாத வெப்பத்தை தாங்கிக் கொண்ட மக்கள் அக்னி நட் சத்திரத்தை எண்ணி கலக்கத் தில் இருந்து வந்தனர்.

அடைமழை

இந்த நிலையில் நேற்று முன் தினம் தொடங்கிய அக்னி நட்சத்திரத்தில் இருந்து ராம நாதபுரம் மாவட்டத்தில் பர வலாக அனைத்து பகுதிகளி லும் நல்ல மழை பெய்து வரு கிறது. குறிப்பாக மாவட்டம் முழுவதும் நேற்று அதி காலை தொடங்கி இடைவிடாது தொடர்ந்து மழை கொட்டி யது. பலத்த இடி மின்னலு டன் பெய்த இந்த மழையால் மாவட்டத்தில் நிலவி வந்த வெப்பத்தின் தாக்கம் தணிந்து குளிர்ச்சி நிலவியது. கடும் வெயிலில் சிக்கி தவித்த மக்கள் மழை பெய்ததால் மகிழ்ச்சியடைந்தனர். கடந்த சில ஆண்டு களுக்கு முன்பு ராமநாதபுரம் மாவட்டத்தில் அக்னி நட் சத்திரத்தின்போது நல்ல மழை பெய்தது. அதன் பின்னர் சில ஆண்டுகள் லேசான மழை பெய்தது. கடந்த 1984ம் ஆண்டு அக்னி நட்சத்திரம் தொடங்கி 3 நாட் கள் மாவட்டம் முழுவதும் இடைவிடாது பலத்த அடை மழை பெய்துள்ளது. அதற்கு பிறகு தற்போது தான் தொடர்ந்து 2 நாட்கள் மழை பெய்துள்ளது.

தென்மேற்கு வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள குறைந்த காற்ற ழுத்த தாழ்வு மண்டலம் கார ணமாக ராமநாதபுரம் மாவட் டத்தில் மழை நீடிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால் தடம் மாறிய தட்பவெப்பத்தை எண்ணி மக்கள் மகிழ்ச்சிய டைந்துள்ளனர். தொடர்ந்து பெய்து வரும் இந்த மழை காரணமாக மாவட்டத்தில் வறண்டு காணப்பட்ட நீர்நி லைகளில் சிறிதளவு தண்ணீர் தேங்கி வருகிறது. இதனால் தண்ணீர் கிடைக்காமல் அவ திப்பட்டு வந்த கால்நடைக ளுக்கு தற்காலிக தீர்வு ஏற்பட் டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழகத்தில் கோடை மழை நீடிக்கும்



தமிழகத்தில் கோடை மழை அடுத்த 24 மணி நேரத்துக்கு நீடிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

வங்கக் கடல் மன்னார் வளைகுடா பகுதியில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்தத் தாழ்வுநிலை காரணமாக, தமிழகம் முழுவதும் திங்கள் கிழமை நள்ளிரவில் இருந்து காலை வரை மழை பெய்தது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் எஸ்.ஆர். ரமணன் கூறியதாவது:

மன்னார் வளைகுடா பகுதி யில் நிலை கொண்டு இருந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை திங்கள்கிழமை காலை 8.30 மணியளவில் மேற்கு நோக்கி நகர்ந்து கன்னியாகுமரி கடற்கரையில் நிலை கொண்டுள்ளது. இதனால் அடுத்த 24 மணி நேரத்துக்கு வட தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், தென் மற்றும் டெல்டா மாவட்டங்களில் அனேக இடங்களிலும் மழை பெய்யும்.

நீலகிரி, கோயம்புத்தூர் உள்ளிட்ட மலைப் பகுதிகளில் கனமழை பெய்வதற்கான வாய்ப்புள்ளது.